# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.  1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.  Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆவணி மாதம் 13-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 31-ம் இலக்கம்


# அன்னையின் மோட்சாரோபணம்



கன்னித்தாயின் பொன்னுடல் கல்லறையின் அழிவைக் காணவில்லை என்றால் மலர்மணம் கமழும் அவளின் மின்உடல் கல்லறையில் தங்காதல்லவா? என்னவாயிற்று? மாமரிமரித்த இரண்டொரு தினத்தில் அன்பும், நன்றியும்பூத்த திருமகன் தாம் இருக்கும் மேலோக இல்லத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். கன்னித்தாய் ஆத்தும சரீரத்தோடு மோட்சம்சென்று தமதுதிருமகன்அண்டை வீற்றிருந்து மகனின்மகிமையைக் கண்டு களிக்கடலில் ஆழ்ந்து படிகின்றாள்.

தேவதாய்மரித்த இரண்டொரு நாளில் ஆத்துமசரீரத்தோடு மோட்சம்போய்விட்டாள் என்பதுதான் கிறீஸ்துவமக்களின் திண்ணமான எண்ணம், அசையாநம்பிக்கை. நான்காம் நூற்றாண்டில் எபேசில்கூடிய திருச்சபைப்பொதுச்சங்கம் மாமரி மெய்யாகவே யேசுவின் தாய், சருவேஸ்பரனின் தாய்என்று கண்டிப்பாய்க் கூறியநாள்முதல் தேவதாயின் மோட்சஆரோபணத்தை எங்கும்விழாவாகக் கிறீஸ்துவமக்கள் கொண்டாடிவந்தார்கள்.

மாமரியின் தேவதாய்த்துவம் தானே அவளுடைய பெருமை சிலாக்கியத்துக்கெல்லாம் மூலகாரணம். மாமரி சருவேஸ்வரனின் தாயெனில் அவளதுகன்னிஉடல் தானே இத்தாய்மைக்குப் பீடமும் காரணமும். அதனால் அவளது உடலையும், உயிரையும் நெடுங்காலம் பிரித்துவைக்க முடியுமா? யேசுவின் மருள்அற்ற உடலும், அருள்உற்ற ஆன்மாவும் தேவ ஆளோடு ஒன்றித்தவை என்றபின், அந்தஉடலையும், ஆன்மாவையும் தெய்வீகத்திலிருந்து பிரிக்கமுடியுமா? அதைப்போலத் தானே இதுவும். மாமரி யேசுவின்பத்தினியும், தாயுமானவள்

— ஜே. ச. ஞானதிக்கம், சே. ச. —

அல்லவா? பத்தாவுக்கும், பத்தினிக்கும்உள்ள ஐக்கியத்தையும், அன்பையும் எவ்வளவு துலக்கமாய் வரைந்திருக்கிறார் அர்ச். சின்னப்பர். பத்தாவும், பத்தினியும் பிரிந்திருக்கக் கூடாதென்றாரே அப்போஸ்தலர். பத்தா இருக்கும் பரலோகஅரசியலில் பத்தினியானமாமரி ஆத்தும சரீரத்தோடு கொலுவீற்றிருக்க வேண்டாமா—நெடுங்காலம் பிரிந்திருக்கமுடியுமா?

பிதாவையும், மாதாவையும் சங்கைசெய்யச் சொல்லியவர் சருவேஸ்வரன். தம்மோடு பாடுகளிலும், சிலுவையிலும் பங்கு கொள்ளுகிறவர்கள், தமது மகிமையிலும் பங்குபெறுவர் என்றாரேயேசு. மாதாவை மகிமைப் படுத்துவதெனில் அவளை முழுவதும் (ஆத்துமத்தையும்சரீரத்தையும்) பத்திரப்படுத்த வேண்டாமா? யேசுவை வளர்த்தது தாயினது தூயஉடலின் புனித பணிஅல்லவா? அவரோடு பங்கிடுசெய்வதெனில் அவருடைய பரிபூரணவாழ்விலும், மகிமையிலும் பங்குபெற வேண்டாமா? யேசு தமது ஆத்துமசரீரத்தோடும், தெய்வீகத்தோடும்தானேமோட்ச மகிமையில் வீற்றிருக்கிறார். அந்தமகிமையில் கன்னித்தாயின் பொன்உடல் மகிமையின் போர்வைகூட வேண்டாமா? மரித்த சிலதினங்களில் மாமரிபிரகாசம்கொழிக்கும் ஆத்துமசரீரத்தோடு முடிவிலா மோட்சமகிமைக்குச் சென்றாள்.

தேவதாய் துணை இரட்சகி. யேசுவோடுசேர்ந்து மனுமக்களை இரட்சிக்கிறாள். துணைஇரட்சகியானவள் உலகமக்களைஇரட்சிக்கிறவள், இரட்சணியத்தின் பூரணபலனையும் சுகிப்பது நியாயம்அல்லவா? இரட்சணியத்தின் பூரணபலன் ஆத்துமமும், சரீரமும் மங்காமகிமையில் மூழ்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# பரீஸ்மாநகரின் திருசேத்திரங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சீன்நதியைக்கடந்து இடதுகரைப்புறமாகநடந்து போய்ச்சேரும் றா து பாக் எனுமிடத்திலுள்ள சிற்றாலய பலிபீடத்தின் மேலாக அர்ச். வின்செனற் டீபோலின் புனிதஇருதயத்தைக் கொண்ட — தேவசிநேகஅக்கினியினால் பற்றியெரிந்த அப்புனித இருதயத்தைக்கொண்ட சிமிழைத்தரிசித்துக்கொண்டு அச்சிற்றாலயத்திலிருந்து இரண்டொரு கட்டடத் தொகுதிகளுக்கு அப்பாலுள்ள றா தே செவ்றெஸ் எனுமிடத்திற்குச் சென்றால்தான் அர்ச். வின்சென்ற் டீபோலின் சொந்தச் சபையாகிய லாசறஸ் சபைக்குருமாரின் கோவில்இருக்கின்றது. இங்குதான்அவர் சேமிக்கப்பட்டிருக்கின்றார். இந்தக் கோவிலே பெரியபலிபீடத்தின் மேலாகவுள்ள ஓர் கண்ணாடிப்பேழையே அதிகம்பிரஸ்தாபம் பெற்றவரும், பெரிதும்வணங்கித் துதிக்கப்படுகிறவருமான அந்தவிருத்தாப்பியரின் புனிதஎன்புகளைக்கொண்டிருக்கிறது. இந்தப்பேழைவரை படிகள்வழியாக மேலேஏறிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. அங்கேஅவர் தமதுகபாலம்—அதாவதுமண்டைஓடு மெழுகினால்செய்த சீவியபரிமாணமுள்ள முகமூடிஒன்றால் மூடப்பெற்றுக் குருத்துவ நீண்ட அங்கி தரித்தபடியே காட்சியளிக்கின்றார்.

## மோண்மாத்தர் மகாதேவாலயம்

பரீஸ்நகர் உள்ளபடியே மகா சிறப்புவாய்ந்த அநேககோவில்களைக் கொண்டுவிளங்குகின்றது. அவற்றுளெல்லாம் நோட்றேடாம்ஆசனக்கோவில் நீங்கலாக மகா மகத்துவம்வாய்ந்தது மொண்மாத்தர் குன்றின்மேல் அமைந்து பரீஸ்நகருக்குமேலாக ஆட்சிசெய்வதுபோல் காட்சியளித்துக்கொண்டிருக்கும் திரு இருதயநாதரின் பிரமாண்டமான மகாதேவாலயமே. தற்கால நவீனமாதிரியான பிரான்ஸிய—பைஸாந்தினிய சிற்பமுறையிலே கட்டப்பெற்றுள்ள இந்தமகாதேவாலயமானது திவ்வியநற்கருணை சதாஎழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டு நித்தியஆராதனை நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருசேத்திரமாகமிளிர்கின்றது.

## இரட்சகரின் திருஅங்கி

பரீஸ்நகருக்குமேலாய்வடக்குப் புறமாகவுள்ள குன்றிலே ஓர் காலம் ஓர்கிராமமாகவிருந்த ஆர்ஜென்ருயில் இன்று தொழிலாளர்வகுப்புகளின் ஓர்உபநகரமாய் இருந்துவருகிறது. இதன் பங்குக்கோவில் தூனிக்கென்ற இரட்சகரின் திருஅங்கியைத் தனதுபெரும்பொக்ஷமாகக் கொண்டிருக்கின்றது. [திறியர் நகரிலே தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தையலில்லாத இரட்சகரின் திருஅங்கியல்ல. இது, நம்முடைய திவ்விய கர்த்தர்தமது திருப்பாடுகளின் போது அணிந்திருந்ததும், அவருடைய விலைமதித்தற்கரிய திருஉதிரத்தால் ஏறக்குறைய முற்றாக நனைந்துபோனதுமான திருஉள்ளங்கியே இதுவாகும். இதுவழமையிலே வெள்ளிக்கிழமை காலை விசுவாசிகளின் வணக்கத்துக்காகக் காட்சிக்கு வைக்கப்படுகின்றது. ஆனால், மற்றப்படி அக்கோவில் அத்தியட்சகுரவரைக் கேட்டுக்கொள்ளும்போது அது காண்பிக்கப்படுகிறது.

அநேக நூற்றாண்டுகளின் முன்னே பிரான்ஸ்தேசம் "திருச்சபையின் சிரேஷ்டகுமாரத்தி" என்ற மகிமைவாய்ந்த நாமதேயத்தைப் பெற்றுக்கொள்ளலாயிற்று. நிச்சயமாகவே அழகுமிக்க அதன்தலைநகரமான பரீஸ் அநேகதிருசேத்திரங்களைக் கொண்டதாய் அந்தநாமதேயத்துக்கிணங்கவே நிலவிவருகின்றது.

— எல். பி. எஸ்

# அங்கும் இங்கும்

### கண்டியர்களைச் சுரண்டும் சிங்களவர்கள்

“கடந்தவகுப்புக்கலவரத்தின்போது தமிழ் ‘சுப்பையாக்கள்’ யாழ்ப்பாணத்துக்குத் துரத்தியடிக்கப் பட்டார்கள், ஆனால், இன்று கண்டியர்கள் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு அம்பலாங்கொடைப்பகுதியிலே மாடமாளிகைகளை நிர்மாணிக்கிறார்களே ‘டேவிட் அப்புகாமிகள்’. இதைப்பற்றிக் கவலை கொள்ளாதிருக்க முடியுமா?”

**திரு. ஆர். ஈ. ஜயதிலகா,**
நாவலப்பிட்டி எம். பி.

“தற்பொழுது கம்யூனிஸ்த கட்சி, சமசமாஜகட்சி ஆகியகட்சிகள் செய்து வரும் பொய்ப்பிரசாரங்களுக்கு நீங்கள் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. சமசமாஜிகள் அல்லது கம்யூனிஸ்தார்கள் அரசாங்கத்தைஅமைத்தால் அந்தஅரசாங்கத்தால் ஜனநாயக உரிமைகள் அடியோடு ஒழிக்கப்பட்டு, ஏகாதிபத்திய ஆட்சியே நடைபெறும். மக்கள் எல்லோரும அந்த அரசாங்கத்திற்கு அடிமைகளாகவே இருந்துவரநேரிடும. ருஷியா, சீனு போன்ற நாடுகள் இதற்கு உதாரணமாகும்.”

**திரு. ஏ. இரத்நாயகா,**
முன்னைநாள் உள்நாட்டுமந்திரி

### மன்னிப்புக் கோருகின்றேன்

“கடந்த வகுப்புவாதக் கலவரங்களின்போது சிங்களவரால் தமிழருக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களுக்காக நான் சிங்களஇனத்தின்சார்பில் மன்னிப்புக் கோர விரும்புகிறேன். நான் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது நான் இலங்கையன் என்று கேள்விப்பட்ட மாத்திரத்திலே, யுத்தகாலத்தில் இலங்கையில் குண்டுகள்வீசிய காரணத்துக்காக ஜப்பானியவிமானப்படையினரின் சார்பாக அதிகமான ஜப்பானியர் தங்களை மன்னிக்கும்படி கோரினார்கள்.”

**திரு. டி. டி. அபயசேகரா,**
கிராமஅபிவிருத்தி உதவித்தலைவர்

### உணரச் செய்யவேண்டும்

“தொழில் நுட்பக்கல்வியைப் பொறுத்தவரையிலே தமிழிலும், சிங்களத்திலும் போதிய நூல்கள் இல்லை. நமது பிள்ளைகளுக்கு நல்ல ஆங்கில அறிவை ஊட்டினாலன்றித் தொழில் நுட்பக் கல்வியைத் திருப்திகரமாக ஊட்டமுடியாது. தங்கள் படிப்பு முடிந்தபின் தொழில் கிடைக்குமாவென்று மாணவர்கள் கல்வியிலே வெறுப்படைகிறார்கள். அரசாங்க சேவைதான் ஒரேவழியென்று அவர்கள் எண்ணக்கூடாது. கமத்தொழில், கைத்தொழில் ஆதியவற்றாலும் ஊதியம் பெறலாமென்று மாணவர்களை உணரச்செய்யவேண்டும்.”

**நீதியரசர் — என். சின்னத்தம்பி**

### தீவிர முற்போக்குக் கட்சிகள்

“முற்போக்குவாதிகளென்று தங்களைக் கூறிக்கொள்ளும் பிலிப், டட்லி, கெனமன், ஈறியகொல்லை ஆகியவர்களோடு நான் ஒருகாலும் சேரமாட்டேன். முற்போக்கு வாதிகளென்று தங்களைக் கூறிக்கொள்ளும் இவர்கள் இரண்டுபேரை ஒன்றுசேர்க்கத்தானும் தகுதியற்றவர்கள். தற்போது பதவியிலுள்ள அரசாங்கத்துக்குத் துரோகஞ் செய்வன விப்ளவ லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்த கட்சியாகிய இரண்டுகட்சிகளுமே. இவைகள் முதலில் அரசாங்கத்தோடுசேர்ந்து ஒத்துழைத்தன. பிறகு அரசாங்கத்திலிருந்து பிரிந்து தீவிரமுற்போக்குக் கட்சிகளாக மாறியுள்ளன.”

**திரு. டி. பி. இலங்கரத்ன,**
உள்நாட்டு மந்திரி

### எல்லோருக்கும் சேவைசெய்வதே நோக்கமாம்

“இந்தநாட்டின் பிரதமரென்ற தோரணையில் நான் எல்லாத் தொகுதிகளுக்கும் ஒரேமாதிரியாகச் சேவை செய்யவேண்டும். எனது தொகுதிக்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று பலர் எதிர்பார்க்கிறபோதிலும் அப்படிச்செய்ய நான் தயாராயில்லை. எந்தவிதமான பாரபட்சமுமின்றியே எல்லோருக்கும் சேவை செய்வதே எனது நோக்கமாகும்.”

**பிரதமர் பண்டாரநாயகா**

### அரசாங்கம் சாதித்தது என்ன?

“கடந்த 1956-ம் வருடப் பொதுத் தேர்தலின்போது பொதுமக்களுக்குப் பல பொய் வாக்குறுதிகளை அளித்துப் பதவிஏற்ற எம். ஈ. பி. அரசாங்கம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமென மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அது சாதித்தவைகள் என்ன? கடந்த மூன்றரைவருடகால ஆட்சியிலே அது முதலாவது வருடத்தை யு. என். பி. அரசாங்கத்தைக் குழிதோண்டிப் புதைப்பதிலும், அதைக் குற்றஞ்சாட்டுவதிலும், இரண்டாவது வருடத்தை வீணுகப் பாஷைப் பிரச்சினையிலும், மூன்றாவது வருடத்தை அவ்வருடத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தை அவசரகால சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து தீர்ப்பதிலும் கழித்தது.

**திரு. எம். டி. பண்டா, எம். பி.**

### அரசாங்கத்தின் மொழிக்கொள்கை

“அரசியல் பிற்போக்குவாதம் நிறைந்ததென்னுபிரிக்காவிலேயே சிறுபான்மையினரின் மொழிக்கு உத்தியோகபூர்வமான அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கையில், இலங்கை அரசாங்கத்தின் மொழிக்கொள்கை மிகவும் கண்டிக்கப்படக் கூடியதாகிறது. ஒரு நாட்டின் அரசியலை எல்லா மக்களும் புத்திசாதுரியமாக அறிந்து செயலாற்றி நாட்டை வளப்படுத்தி முன்னேறச் செய்வதை இலட்சியமாகக் கொள்ளும் எந்த அரசாங்கமும் அம்மக்களின் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து வழங்கவேண்டியது அவசியம். ஒரு இனத்தைச்சேர்ந்த மக்களின்மொழியை அரசியல்ரீதியில் நிராகரிப்பது அம்மக்களை அரசியல்வாழ்வில் பங்குபற்றுது தடுப்பதற்குச் சமமாகும்.”

**திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,**
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

### கைத்தொழில் செய்வது இழிவன்று

“எமதுஇளைஞர்கள் அரசாங்கஉத்தியோகத்தைநம்பித் தங்கள் வாணுளை வீணுகக் கழிக்கின்றார்கள். அரசாங்க உத்தியோகம் கூடாதென்பதோ அன்றேல் கிடைக்கும் உத்தியோகத்தை உதறித்தள்ளிவிடவேண்டுமென்பதோ எனது கருத்தல்ல. படிப்பிற்கேற்ற உத்தியோகம் பார்க்கவேண்டியதுதான். ஆனால், நிரந்தரமான ஓர்வேலை கிடைக்கும்வரைக்கும் நமது இளைஞர்கள் என்ன செய்கின்றார்கள்? உடலுழைப்பைமறந்து, வீணுகநேரத்தைப் போக்குகின்றார்கள். ஏதாவது சிறு கைத்தொழில்களைச் செய்ய அவர்கள் முன்வரவேண்டும். கைத்தொழில் செய்வது இழிவென்ற மனப்பான்மை மாறவேண்டும். தென்னிலங்கையிலே இளம்பெண்கள்உட்பட அநேகர் கைத்தொழிலில் ஈடுபட்டு ஏறக்குறைய 40 லட்சம்ரூபா சம்பளமாகப் பெறுகின்றார்கள். ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள கைத்தொழில்கள்மூலம் நமக்குக் கிடைக்கும் வருமானமோ மிக மிகக் குறைவாகும்.”

**திரு. எம். ஸ்ரீகந்தா,**
யாழ்ப்பாண அரசாங்க அதிபர்

### முன்னேறுவதற்கு ஆங்கிலம்

“ஆங்கிலம் ஆங்கிலேயருக்குமட்டும் சொந்தமான மொழியாக இப்பொழுதில்லை. அது சர்வதேச மொழியாக மாறிவிட்டது. மக்கள் சமூகம் பல துறைகளிலும் முன்னேறுவதற்கு ஆங்கிலம் பயனுள்ளமொழியாக இருக்கின்றது. ஆகவேதான் அதனைப் புறக்கணிக்கவோ அன்றேல் ஒதுக்கவோ கல்வி ஸ்தாபனங்கள் முதலான எந்தச் சக்தியும் முன்வரக்கூடாது.”

**நீதியரசர்**
**டக்றர் எச். டபிள்யு. தம்பையா**

### இலங்கையில் இடமில்லை

“தேசியமயமாக்கப்பட்டிருக்கும்— அதாவது தேச உடைமையாக்கப்பட்டிருக்கும் தொழில் ஸ்தாபனங்களெல்லாம் வெற்றிகரமாகச் செயற்படவில்லை. அதனால் இப்போதைக்குத் தோட்டங்களைத் தேசிய மயமாக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை. கட்சிவேற்றுமை உணர்ச்சிகளைக் கைவிட்டு மக்கள் நாட்டின் நல்வாழ்வுக்காகப் பாடுபட முன்வரவேண்டும். இலங்கை மக்களில் பெரும்பான்மையோரான புத்தர்கள் கம்யூனிஸத்தை வெறுப்பவர்கள். எனவே, கம்யூனிஸத்துக்கு இலங்கையில் இடமில்லை.”

**திரு. ஏ. திஸநாயகா,**
தேசியமயசேவை உதவிமந்திரி

### தமிழ்ப் பெண்மணிகளும் வருங்காலமும்

“தனக்கு வரும் கணவன் உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தனுகவோ, டக்றராகவோ, எஞ்ஜினியராகவோ இருக்கவேண்டுமென்று நமது பெண்மணிகள் இதுவரைகாலமும் எண்ணி வந்தார்கள். இப்போதுள்ள நிலைமையில் அவர்களின் மனப்பான்மை மாறவேண்டும். தமிழ்மக்களுக்கு இனி அரசாங்க உத்தியோகம் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே, அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கொண்டுநடத்தவும், வாழ்க்கையை வளம்படுத்தவும் விவசாயத்தையே நம்பியிருக்கவேண்டும். அதனால்தான் தனதுகணவன் உத்தியோகஸ்தனுக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கும் மனப்பான்மையை விடுத்து விவசாயியாக இருக்கவேண்டுமென்று எமது பெண்கள் விரும்பவேண்டும். அப்பொழுதுதான் நாம்முன்னேற்றமடைய முடியும். தமிழ்மக்களின் எதிர்காலம் விவசாயத்தில்தான் தங்கியிருக்கிறது. எதையும் சொல்லில்மட்டும் நில்லாமல் செயலிலும் காட்டவேண்டும். நான் கிளிநொச்சியில் பத்துஏக்கர்நிலம் எடுத்திருக்கிறேன். அரசியலைவிட்டு நீங்கியதும் அங்கு விவசாயத்தில் ஈடுபடச் செல்வேன்.”

**திரு. எஸ். இராசவரோதயம்,**
திரிகோணமலை எம். பி.

---

### சிலுவைப்பாதை ஸ்தல சிற்றாலயங்கள்

பாத்திமாதிருப்பதியிலே தற்போது அமைக்கப்பட்டுவரும் சிலுவைப்பாதை ஸ்தலங்கள் ஒவ்வொன்றும் தனக்கென ஒவ்வோர் சிற்றாலயத்தைக் கொண்டிருக்கும். ஹங்கேரியின் சுதந்திரத்திற்காகத் தேவதாயாரை மனுப்பேசும்படியாகக் கேட்டு உலகமுழுவதிலுமுள்ள ஹங்கேரிய அகதிகள் இந்தச் சிற்றாலயங்களை நன்கொடையாக அமைத்துக்கொடுக்கின்றார்கள். பிறேசில் நாட்டிலே வசிக்கின்ற ஓர் ஹங்கேரியரான லடிஸ்லோ பாறெக் என்பவரே இவற்றின் கட்டடநிர்மாண சிற்பியாவர். முதலாவதுஸ்தல சிற்றாலயத்தின் அஸ்திபாரக்கல்லை லீய்றியாவின் மேற்றிராணியார் சமீபத்தில் ஆசீர்வதிக்கலாயினர்.

### மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**அர்ச். வின்சென் டி போல் தரும சபைத் தினம்:**

ஆவணித்திங்கள் 2-ம்நாள், ஜாஎல, அர்ச். சூசையப்பர் பான்ட்வாத்தியம் இனிதேமுழங்கி இன்னிசைபரப்பிக்கொண்டிருந்தது எம்பங்குத் தேவாலயத்தில்.

காலை 7மணிக்கு நமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் பாடற்பூசைநிறைவேறியது. பூசையின்போது வின்சென்ற் டி போல் தருமசபையால் தாபரிக்கப்படும் வறியோர் திருவிருந்தருந்தி இத்தினத்தை நற்தினமாக்கினர். பூசையின்பின்னர் கிளெண்னி ஆண்கள்பாடசாலையில் இவ்வறியோர்களுக்குச் சம்பிரமமாகக் காலைப்போசனம் அளிக்கப்பட்டது. அவ்வமயம் இச்சபையின் ஞானப்பரிபாலனரான கட்டளைக்குரவர் ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினர். அதில் சபையினர்தொகை அதிகமாக்கப்பட வேண்டுமெனவும், சபையின்கடமைகள், சரித்திரவரலாறு என்பனபற்றியும் விசேஷமாகக் குறிப்பிட்டனர். பின்னர் சபை அங்கத்தினர் ஒன்றுகூடிக் காலைப்போசனமருந்திக் கலந்துரையாடினர். முடிவில் இவர்கள் தங்கள்சபைக் கூட்டத்தைக் கூட்டினர். சபைக்காரியதரிசி திரு சி. ஈ. சீவரட்டினம் கூட்டஅறிக்கையைச் சமர்ப்பித்தார். தனதிகாரி எம். கபிலஸ்அவர்களால் கணக்கறிக்கை விளக்கப்பெற்றது. அதன்மேல் சுவாமிகளின் நல்லுரையோடும், திருக்கர ஆசீரோடும், பான்ட்வாத்திய முழக்கத்தோடும் கூட்டம்இனிதேகலைந்தது.

**ஐந்தாம்வருட ஞாபகார்த்தம்**

தாண்டவன்வெளிப்பங்கின் கட்டளைக்குரவராய்ப் பணிபுரிந்து பரமபதமடைந்தவரான வண. எஸ். லாசறஸ் சுவாமிகளின் ஐந்தாம்வருட மரண ஞாபகார்த்ததினம் சென்ற 5-8-59 புதன்வாரம் வந்துபோனது. அன்று காலை துக்கநாதம்செய்தன ஆலயமணிகள். ஞாபகார்த்தமேடை மரித்த குருப்பிரசாதியின் ஞாபகத்தைப் பார்த்தோருள்ளங்களில் உறுத்திக்கொண்டிருந்தது. பங்குக்கிறீஸ்தவர்கள், பத்திச் சபையினர், பாடசாலைப்பிள்ளைகள், அன்பர்கள்என்போரால் ஆலயம்தேங்கியிருந்தது. நமது கட்டளைக்குரவர், துக்கப்பாடற்பூசையும், ஞாபகார்த்த மேடை ஆசீர்வதிப்பும் நிறைவேற்றி வைத்தார். பெருந்திரளானேர் திருவிருந்தருந்திக் காலஞ்சென்ற சுவாமியாரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக் கொண்டனர். அன்றுபிற்பகல் 3 மணியளவில் கிளெண்னி ஆண், பெண் பாடசாலையினர் பங்குத்தேவாலயத்திற்கூடி, மரித்துப்போன குரவருக்காகச் செபமாலைஓதி ஒப்புக்கொடுத்தனர். யாவருக்கும் ஞாபகார்த்த படங்கள் கட்டளைக்குரவரால் வழங்கப்பட்டன.

**ஆயித்தியமலைச் சதாசகாயமாதா திருநாள்:**

ஆயித்தியமலையில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் சதாசகாய மாதாவின் திருநாள் வழமைப்பிரகாரம் எதிரேவரும் புரட்டாதித் திங்கள் 16-ம் நாள் கொண்டாடப்படும். இத்திருநாளுக்கான நோவனைகள்செய்ய விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியைப் பயன்படுத்திக்கொள்வார்களாக.

**வண. ஜி, ஈ. எல். வம்பேக் சுவாமிகள்,**
கட்டளைக்குரவர்,
பரிசுத்த வியாகுலமாதா ஆலயம்,
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

# அழிவைக்காணாத அர்ச். கூரேதார்ஸின் திருச்சரீரம்

கூரேதார்ஸ் — அதாவது ஆர்ஸ்கிராமத்தின் பங்குக்குரவரெனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற அர்ச். மரியேவியான்னி அருளப்பர் பரமபதமடைந்த நூற்றாண்டு நிறைவுவிழா இதுவாகவே, இம்முறை அவர் திருநாள் சென்ற 8-ந் திகதியன்று வழமையிலும் அதிகம் சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. "மக்கள் குரவர்" என்றும் அழைக்கப்படுகிறவரும், பங்குக் குரவர்களின் பாதுகாவலருமான இவர் 1815-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்று, மூன்று வருடங்களின்பின் ஆர்ஸ் என்ற சிறிய கிராமத்தின் பங்குக்குரவராக நியமனஞ் செய்யப்பெற்றார்.

அதுமுதல் தமது குருத்துவ வாழ்க்கையில் மிகப்பெரும் பகுதியைக் கோவிலிலே — சரிவரச் சொல்லுமிடத்துப் பாவசங்கீர்த்தனத்தொட்டியிலே அவர் செலவிட்டுத் தம்முடைய பங்குவிசாரணைக் கருமங்களைப் பேராக நடத்திவந்து 1859-ம் ஆண்டு ஆவணிமாதம் 4-ந் திகதியன்று பரமபதமடைந்தார். 1905-ம் ஆண்டு முத்திப்பேறுபெற்ற பட்டமும், இருபது வருடங்களின் பின் அர்ச்சியசிட்ட பட்டமும் சூட்டப்பெற்றுப் பிந்தப் பங்குக் குருமாரின் பாதுகாவலராகப் பிரகடனஞ் செய்யப்பெற்றார். முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவதற்குமுன் இவருடைய பரிசுத்ததனத்தைப் பற்றிய விசாரணையிலே சரியானகட்டம் வந்ததும் அவருடைய கல்லறை திறக்கப்பட்டபோது அவருடைய புனித உடல் அழிவுறாதிருக்கக் கண்டறியப்பட்டது. அதிலும் அவர் வதனமும், சரீரத்தின் ஏனைய பகுதியும் ஓர்வித கருமையான பழுப்புநிறமாக மாறியிருந்தன. ஆனால், அபிஷேகஞ் செய்யப்பெற்ற அவரது குருத்துவ திருக்கரங்களோ — திவ்விய நற்கருணையை அத்தனை அநேகாநேகம்தரமும், அத்தனை பக்திபற்றுதலோடும் ஏந்திய — அத்தனை பெருந்தொகையான பாவிகள்மீது அல்லும் பகலுமாகப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் வழங்கிய அவரது திருக்கரங்களோ முன்போல இயற்கையான வெண்மைநிறமாய் இருந்து வருகின்றன.

அவருடைய பரிசுத்த மரணத்தின் இந்த நூறாம் ஆண்டிலே அவரது இருதயமாகியதிருப்பண்டம் பிரான்ஸிலுள்ளஒருதொகையான ஆலயங்களுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு வருகிறது. உதாரணமாக, லூர்து பதி சென்றஆடிமாதம் 5-ந்திகதி முதல் 12-ந் திகதி வரையிலே அதனைக் கொண்டிருந்தது. இச்சந்தர்ப்பத்திலே அத்திருப்பதியின் தியாஸ்மேற்றிராணியார் விடுத்த திருமுகம் ஒன்றிலே, பிரான்ஸிலும், எங்கெங்கும் திருச்சபைக்கு இன்று தேவைப்படும் குருமாரைத் தொகையாகப் பெற்றுத்தரும்படியாய் விசேஷவிதமாய் அவரைப்பார்த்து மன்றாடிக்கொள்ளுமாறு தமது மேற்றிராசனமக்களைக் கேட்டுக் கொண்டார்.

பரிசுத்தபாப்பரசர் இந்தமுக்கியமான நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தி — இன்றைய உலகிற்கு இந்தப் பரிசுத்த குருப்பிரசாதியின் செய்தியை வலியுறுத்தி நிகழும் ஆவணிமாதம் 1-ந் திகதியன்று ஓர் விசேஷ சாதாரண நிருபம் விடுக்கலாயினர்.

—✻—

# முதன்முறையாகக் குடும்பத்துடன் பூசைகாணச் சென்றார்

அன்று ஞாயிற்றுக்கிழமை திரு. பற்றிக்பூர்ற் அவர்கள் தமது மனைவியோடும், மூன்று பிள்ளைகளோடும் முதன்முறையாகத் திவ்விய பூசை காணச் சென்றார். இதை வாசிக்கும்போது எவர்க்குமே ஆச்சரியம் ஏற்படும். ஆம், இதில் ஒரு விசேஷம் உண்டு. அவர் பூசைகாணச் சென்றபோதிலும் இங்கிலாந்திலே கிளிவ்ரன் எனுமிடத்து அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராய் அப்போதுமே இருந்துவந்தார். அவரது முழுக்குடும்பமும் ஒருங்கே பூசைகாணப்போனது இதுதான் முதன்முறையாகும். கடந்த மூன்று வருடங்களுக்குமேல் இந்தப் பிரச்சினை சம்பந்தமாய்த் திரு. பற்றிக் பூர்ற் கலங்கிக் கொண்டிருந்தார். கடைசியாக அந்த வாரத்தில்தான் அவர் அங்கிளிக்கன்சபைப் பதவியைக் கைநெகிழ்ந்து கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளத் திடசித்தங் கொண்டார்.

அதற்குமுந்திய ஆறு வாரங்களாக அவர் ஞாயிற்றுக்கிழமைதோறும் அதிகாலையிலே கார் மூலம் சற்றேதூரமான ஹிற்சின் எனும் இடத்திற்குத் தனிமையாகச்சென்று அங்கே திவ்விய பூசைகண்டுவந்ததுடன் அங்குள்ள சம்மிக்கேல் கல்லூரியின் அதிபரான வண. பிலிப் லெம்மன்சுவாமியாருடன் வேதவிஷயமாய்க் கலந்துவிவாதித்துக் கொண்டும் வந்தார். "நான் அதிகம்சந்தோஷமாய் இருக்கிறேன்; நான்செய்தது சரிதானென்று முற்றும் நிச்சயமாய் இருக்கிறேன்" என்று அவர் தமது நண்பர் ஒருவரிடம் கூறலாயினர். அவர் குடும்பமும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்வதில் அவரைப்பின்பற்றிக்கொண்டிருக்கிறது.

"கத்தோலிக்கரும் நமக்கு உதவியளிப்பதில் முற்றிலுமே வியப்புக்குரியவிதமாய் நடந்திருக்கிறார்கள்; ஹிற்சின் எனுமிடத்துக்குச் சமீபமாக அவர்களால் எனக்கு ஓர்மனை கொடுபட்டிருக்கிறது; இன்னும் ஏறக்குறைய மூன்று வாரங்களிலே எனது குடும்பத்துடன் அங்கு போகவிருக்கிறேன்; விரைவிலே ஓர் ஆசிரியபதவியைக் கண்டுகொள்வேனென நம்புகிறேன்; எனது கோவில் வார்டன் இற்றைக்குப் 18 மாதங்களின்முன் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினார். ஆனால், இது என்னைத் தூண்டவில்லை; எனது சொந்தஎண்ணப்படியே கத்தோலிக்க திருச்சபையில்சேர நான் தீர்மானித்தேன்" என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

—✻—

# இரட்சகரின் திரு அங்கிக் காட்சி

மேற்குஜேர்மனியைச்சேர்ந்த திறியர்நகரிலே சென்ற ஆடி மாதம் 19-ந் திகதிமுதல் காட்சிக்கும், வணக்கத்துக்குமாக வைக்கப்பட்டிருக்கும் நமது இரட்சகரின் தையலில்லாத திரு அங்கியைத் தரிசிப்பதற்கும், பக்தி செய்வதற்குமாகப் பெருந்திரளான யாத்திரிகர்கள் உலகின் நாலுபகுதிகளிலுமிருந்தே அங்கு சரிந்துகொண்டிருக்கின்றார்கள். காலை 7 மணிமுதல் மாலை 7 மணி வரை மணித்தியாலந்தோறும் திவ்வியபூசைகள் தொடர்ந்து நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. யாத்திரிகர்களை வரவேற்பதற்கென்று அந்நகரிலுள்ள எட்டுக்கோவில்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. திருஅங்கியைப் பக்திசெய்வதிலே கலந்துகொள்ளும் அனைவர்க்கும் அருளப்ப பாப்பரசர் தமது ஆசி வழங்கி, நடைபெறவிருக்கும் திருச்சபைப் பொதுச்சங்கத்தின் அனுகூலத்துக்காக மன்றாடிக்கொள்ளுமாறு கேட்டிருக்கின்றார். திருஅங்கியை எவருமே தொடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், மெடல்கள் போன்ற சிறுவஸ்துக்களை அங்குநிற்கும் ஓர் குருவானவரிடம்கொடுத்தால் அவர் திருஅங்கியிலே அவைகளைத் தொட்டுக் கொடுக்கின்றார்.

# இங்கிலாந்திலே கத்தோலிக்க திருச்சபை

1958-ம் ஆண்டிலே உள்நாட்டு மிஷன்ஞாயிறு அனுசரிக்கப்பட்டதுமுதல் இங்கிலாந்திலும், வேல்ஸிலும் ஒன்றின்பின் ஒன்றாக 60 புதியகோவில்கள் நவமாகக்கட்டித் திறக்கப்பட்டிருக்கின்றன. அதனால், முன்னிலும் பார்க்க 60 இடங்களிலே கூடுதலாகத் திவ்வியபூசை பகிரங்கமாக நடைபெற்று வருகின்றது. இந்தப்புதியகோவில்கள் உறுதியான கட்டடங்களாகும். இவைகள்தவிர எத்தனையோ பாடசாலைகளும், கன்னிகாமடங்களும் கட்டப்பட்டுள்ளன. இப்போது போல இங்கிலாந்து முன்னெப்போதாவது அத்தனை அநேகமான கன்னியாஸ்திரிமாரையும், கன்னிகாமடங்களையும் கொண்டிருக்கவில்லை. பெண்மணிகளுக்கான கன்னிகாசபைகளாய் இங்கிலாந்திலும், வேல்ஸிலும் 215 சபைகள் இருக்கின்றன. அவற்றைச்சேர்ந்த கன்னியாஸ்திரிமார் 1,172 மடங்களில் சஞ்சரித்துப் பல்வேறு தொண்டுகளும் ஆற்றிவருகின்றனர். அங்கு வருடந்தோறும் விசாரணைப் பங்குகளும், கோவில்களும், கன்னிகாமடங்களும், பாடசாலைகளும் அதிகரித்துக்கொண்டு வருவதானது திருச்சபை அடைந்துகொண்டுவரும் ஆச்சரியகரமான விருத்தியையே புலப்படுத்துகின்றது.

---

### நாஸ்திகராயிருந்து மனந்திரும்பிப்

## பிரஸ்தாபம்பெற்ற குருவானவர்

தமது இளமையிலே ஓர் நாஸ்திகராயும், சோஷலிஸ்தராயுமிருந்து மனந்திரும்பிப் பின்னர் இத்தாலியின்மகாகீர்த்திவாய்ந்த கத்தோலிக்க பண்டித சிகாமணிகளில் ஒருவராய்விளங்கி மிலான் நகரிலே திருஇருதயநாதர் சர்வகலாசாலையை அடிபிட்டவரான வண. கெமெல்லி சுவாமியார் தமது 81-ம்வயதில் காலஞ்செல்லலாயினாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. ஓர் வைத்திய கலாநிதியான இவர் இத்தாலிய பழைய சோஷலிஸ்த கட்சியில் ஆர்வம்படைத்த ஓர் அங்கத்தவராய் இருந்துவந்து மனந்திரும்பிய பின்னர் பிரான்சீஸ்கன் சபையில் சேர்ந்து ஓர் குருவாயினார். ஓர் சீவசாஸ்திர விற்பன்னரும், மனோதத்துவ சாஸ்திர பேராசிரியருமாகப் பிரக்கியாதி பெற்றிருந்தஇவர் 100 புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கின்றார்.

## ஆவணி மாதம்

பொதுக்கருத்து: திருச்சபையின் சமூகப்போதனையை உலகம்எங்கும் நாள்தோறும் அதிகம் பயனளிக்கும் வகையில் பரப்புவதற்காக வேண்டிக் கொள்வது.

வேதபோதக கருத்து: வேதபோதக நாடுகளில் தேவஅழைத்தல்கள் பெருகுவதானது பணத்தட்டுப்பாட்டினுல் தடைப்படாதிருப்பதற்காக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஆவணிமாதம் 13-ந் திகதி

## பிரதமரின் ஆட்சிச் சரிதை

திரு. பண்டாரநாயகா சென்ற பொதுத்தேர்தலிலே வெற்றியீட்டிப் பிரதமராக ஆட்சிப் பீடத்தில் என்றுஅமர்ந்தாரோ அன்றுமுதல் எமது நாட்டின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலே இதுவரைநிகழாத எத்தனையோ விபரீதசம்பவங்கள் ஒன்றின் பின்னென்ருய் நிகழ்ந்துஅவரின் ஆட்சிகால சரித்திரத்தையும், நாட்டின் சரித்திரத்தையும் மகிமைப்படுத்தி விட்டிருக்கின்றன. அவர் பிரதமராகவந்ததும் ஆய்ந்தோய்ந்துபாராது, பின்முன் ஆலோசனைபண்ணுது தனது கட்சியின்பெரும்பான்மைப்பலத்தைக்கொண்டு 'தனிச்சிங்கள' சட்டத்தை அரங்கேற்றிவைத்தார். சிறுபான்மையினரில் பெரும்பான்மையினரான தமிழரும், எதிர்க்கட்சியினரும் இந்தச் சட்டம் அநீதியானதென்றும், அதனுல் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் ஆட்சேபித்தார்கள், அச்சுறுத்தினுர்கள். ஆனுல், இவையெல்லாம் பிரதமருக்குச் செவிடன்காதில் சங்கநாதஞ் செய்தவாருய்முடிந்தது. அதன்பலன் என்னவாயிற்று. அந்தோ! மனிதஇரத்தம் சிந்தப்பட்டது. பலநூற்ருண்டுகளாகச் சகோதரங்களைப்போன்று சமாதானமாக வாழ்ந்திருந்த சிங்களர்—தமிழர்ஐக்கியம் காற்ருய்ப் பறந்துவிட்டது.

அடுத்துவந்தது பயங்கரவெள்ளப்பிரவாகம். அதனுல்ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள் இம்மட்டென்று சொல்லுந்தரமா? இலங்கையே கண்டுகேட்டறியாத இந்தவெள்ளப்பிரவாகம் பிரதமர்பண்டாரநாயகாவின் ஆட்சிகாலச் சரித்திரசம்பவமாக நிகழவேண்டிய காரணமென்ன? ஏனென்றுகேட்பார் இல்லாமையாலா? போகட்டும், கடந்தஆண்டிலே நடைபெற்ற வகுப்புக்கலவரங்களைப்பற்றி இன்றுநினைத்தாலும் நெஞ்சம்திக்கிடுகின்றதே. மனுத்தன்மையற்றவிதமாய், காட்டுமிராண்டித்தனமாய் எத்தனைமக்கள் சித்திரவதைசெய்யப்பட்டார்கள்! தமிழ் மக்கள் எத்துணைபெரும் கஷ்டநஷ்டமடைந்தார்கள்!

இந்தவிதமாகக் கடந்தமூன்றரைவருடங்களிலும் நடந்தவைகள்போக, பாராளுமன்றத்தில் சென்றவெள்ளிக்கிழமை நிகழ்ந்த சம்பவம் பிரதமர்பண்டாரநாயகாவின் ஆட்சிச்சரிதைக்கே முடிசூட்டிவிட்ட ஓர்சம்பவமெனலாம். அதிலே வரவுசெலவுத் திட்டவிவாதத்தின்போது நடைபெற்ற பேச்சுகளில் அடங்கியுள்ளஏச்சுகளிலெல்லாம் அச்சம்பவமே முதலிடம் வகித்ததுஎனலாம். அன்றுபிற்பகல் கூடிய பாராளுமன்றத்தில் திரு. பிலிப் குணவர்த்தண, திரு. றுபேட் குணவர்த்தண சகோதரர்கள் ஒருபுறத்தில். பிரதமர்பண்டாரநாயகா மறுபுறத்தில். சபையே அமைதிகெட்டு அல்லோலகல்லோலப்பட்டது. ஆசனத்தைத் தூக்கி அடிக்கமுனைந்தார்ஒருவர். மேசையிலிருந்தகடுதாசிப் பாரந்தாங்கியைத்தூக்கி வீசமுனைந்தார் மற்ருெருவர். அடிபிடியிலே முடியவிருந்த இந்தப்போர் அவதூறுமொழிகள், வசைமாரிகளுடன் முடிவடைந்தது. பிரதமர்பண்டாரநாயகாவைப் பாராளுமன்றத்திலே பிரதிநிதிஒருவர் தாக்கமுயன்றது இதுவேமுதன்முறையாகும்.

இச்சம்பவம் பெரிதும்வெறுக்கத்தக்கது. வருந்தத்தக்கது. சபையிலே எந்தவிவாதமும் ஒழுங்கான — கண்ணியமான முறையிலே நடக்கவேண்டுமானுல் பிரதிநிதிகள் ஒருவரையொருவர் பட்டஞ்சொல்லி அழைப்பதையும், திட்டிக்கொள்வதையும் விட்டுவிடவேண்டும். சபைஉரிமைகளென்ற திரைமறைவிலே மறைந்துநின்றுகொண்டு அவர்கள் தங்கள் சொந்தக்கோபதாபங்களைத் தீர்த்துக்கொள்ள முயல்வதை நிறுத்தவேண்டும். தனதுஆட்சிபற்றிய வரலாறு என்னசொல்லப்போகிறதோ என்றஅங்கலாய்ப்பு சமீபகாலமுதல் பிரதமருக்கு ஏற்பட்டிருப்பதாக அவரதுபேச்சுகள் சிலவற்றிலிருந்து தெரியவருகிறது. அவ்வாருக, இச்சம்பவம் இப்போதுநிகழ்ந்திருக்கிறது. இனிமேலும் ஏதேதுசம்பவங்கள் நிகழுமோ? அவர் பிரதமராய் வந்ததும்போதும், பட்டபாடும் போதும்என்று ஒருகால்சரித்திரம் சொல்லிக்காட்டுமோ?

---

## கேரளமக்களின் குதூகலம்

கேரளநாட்டிலே கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் 28மாதகாலம் மக்கள்அனுபவித்த கஷ்டநஷ்டங்களும், மட்டற்றஇம்சைகளும், எதிர்க்கட்சிகள் 46தினங்களாக வீராவேசத்துடன் நடத்திய தீவிரஎதிர்ப்புக்கிளர்ச்சியின்விளைவாகக் கம்யூனிஸ்தர்களாலும், பொலிஸ்குண்டர்களாலும் ஏற்பட்டஉயிர்ச்சேதங்களும், வாதைவேதனைகளும் ஒருவாறுநின்று சனநாயகத்தையும், சமாதானத்தையும் ஆசிக்கின்ற கேரளமக்கள்இன்றுஆறுதலாய்ச் சுவாசம் விடுகின்ருர்கள். கம்யூனிஸ்தர்களின்அநீதியான அக்கிரஆட்சி இறுதிகண்டுவிட்டது! கேரளமந்திரிசபை பதவிநீக்கம் செய்யப்பட்டு ஜனுதிபதியின் ஆட்சிபிரகடனஞ் செய்யப்பெற்றுவிட்டது! என்றசுபசெய்தியை அறியவந்ததே கேரளமக்கள்அங்கங்கெல்லாம் பெருந்திரளாகக் கூடிப்பெருமகிழ்ச்சி காட்டினுர்கள். பட்டாசுகள்வெடித்தும், வாத்தியங்கள்இசைத்தும், ஊர்வலங்கள்நடத்தியும், சுலோகங்களைக்கோஷித்து ஆர்ப்பரித்தும் தங்கள்மகிழ்ச்சியைப் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொண்டார்கள்.

அம்மட்டா! ஆலயங்கள்தோறுஞ்சென்று, தங்களுக்கு இந்தப் பெரும்அனுக்கிரகத்தைச் செய்தருளிய எல்லாம்வல்ல இறைவனுக்கு நன்றியறிந்ததோத்திரம் சமர்ப்பித்துநின்ருர்கள். பகிரங்க கூட்டங்களும், கொண்டாட்டங்களும் நடத்தினுர்கள். இந்தக் கொண்டாட்டங்களில் முக்கியமானது, கம்யூனிஸத்தைச் சுட்டுக் காடாற்றியதேயாகும். கறுப்புக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பிரேதப்பெட்டிஒன்று சகலமானதுக்ககோலங்களோடும் எடுத்துச்செல்லப்பட்டது. கறுப்புக்கொடிகளை உயர்த்தியபடியும், சிவப்புக்கொடிகளை அரைமட்டத்தில் இறக்கியபடியும் தொண்டர்கள் துவிச்சக்கரவண்டிகளிலும், கார்களிலும் பின்தொடர்ந்து சென்ருர்கள். ஆற்றங்கரையை அடைந்ததும் பிரேதப்பெட்டி தகனஞ்செய்யப்பட்டது. சாம்பர் ஆற்றில்அள்ளி வீசப்பட்டது. இவ்வாருகக் கம்யூனிஸம் கேரளநாட்டிலே இறந்துபட்டுவிட்டது; இனிமேல் அதுஎன்றைக்கும் தலைகாட்டாது தொலைந்துவிட்டதாக அறிகுறி காண்பிக்கப்பட்டது. இந்தவிருப்பம் உள்ளபடியே நிறைவேறுமானுல் கேரளாவுக்குமாத்திரமல்ல, ஆனுல்,இந்தியாவுக்கும், பொதுவாக உலகமுழுவதுக்குமே பெரும்ஆசீர்வாதமாகும்.

ஜனுதிபதிஆட்சி பிரகடனஞ் செய்யப்பட்டபின் கேரளாவிலே அமைதிபிறந்துள்ளது. கம்யூனிஸ்தர்கள் ஏதும்குழப்பம் செய்வார்களானுல் அதனைச்சமாளிப்பதற்குப் பொலிஸ்படைகள் தயாராய்நிற்கின்றன. பலவிடங்களிலும் மூடப்பட்டபாடசாலைகள் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸ்தஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்து சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களும் கோஷ்டிகோஷ்டியாக விடுதலைசெய்யப் படுகின்ருர்கள். கேரளகம்யூனிஸ்த அரசாங்க முதன்மந்திரி நம்பூதிரிபாத் எப்படித்தான் அல்லத் தட்டியபோதிலும், ஜனுதிபதியின் தலையீட்டைக் கேரள கம்யூனிஸ்த அரசாங்கம் விரும்பியதென்றும், நிலைமையைத் தன்னுல் கட்டுப்படுத்த முடியாதென அது தெரிந்துகொண்டதெனக்கூறுவது முற்றிலும்பொருந்துமென்றும் பிரதமர்நேரு தாம்முன்னர் கூறியதை மீண்டும்வலியுறுத்தியிருக்கின்ருர்.

இனிமேல் நடக்கப்போவதென்ன? கேரளசட்டசபை கலைக்கப்பட்டுவிட்டதால் அங்கு புதிதாக ஓர்பொதுத்தேர்தல் நடைபெறவேண்டியது அவசியம். இதற்கான ஆயத்தமும் நடைபெருமலில்லை. கேரளவிடுதலைஇயக்கப் பெருந்தலைவரான திரு. மன்னத் பத்மநாபன்அவர்கள் அடுத்துவரும் தேர்தல்பற்றிச் சென்றதிங்கட்கிழமை பேசியபோது: பல்வேறுகட்சிகளுக்கிடையிலும் தற்போது இருந்துவரும்ஐக்கியம் தொடர்ந்து பாதுகாக்கப்படும்; அதனுல் மறுதேர்தலில் நாம் மகத்தான வெற்றி ஈட்டுவோம்என்பது உறுதியாகும்; அதிலே கம்யூனிஸ்தர்களுக்குப் பத்துஸ்தானங்கள்கூடக் கிடையாதெனத் தெரிவித்திருக்கின்ருர். கேரளத்திலே ஜனுதிபதியின்தலையீட்டை ஆட்சேபித்து இந்தியாவிலே சில இடங்களில் கம்யூனிஸ்தர்கள் ஆர்ப்பாட்டஞ்செய்துகுமுறுவதாலே யாதுபலனும் வரப்போவதேயில்லை.

## ஆசனக்கோவிலில் ஆவணித்திருநாள்

யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே ஆவணித்திருநாளென்று அறியப்படுவதாகிய தேவதாயாரின் மோட்சாரோபணத்திருநாள் வழமைபோல நாளை நின்றுவரும் 15-ந் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கு ஆயத்தமான திருவிழாக்கள் இம்மாதம் 1-ந் திகதி ஆரம்பமாகிப் பக்திச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சனிக்கிழமை காலை 7-15 மணிக்குப் பெரியபாடற்பூசையோடும், சாயந்தரம் வேஸ்பர், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியநற்கருணை ஆசிர்வாதத்தோடும் திருநாள்நிறைவாகும்.

## செத்தல்மிளகாய்த் தடை

இலங்கையின் எப்பகுதியிலிருந்தாவது யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு உள்ளூர்ச் செத்தல்மிளகாய் கொண்டுவருவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகச் சென்றவெள்ளிக்கிழமை வெளியான 'கெசற்' அறிவித்தல் ஒன்றின் மூலம் பிரதமர்பண்டாரநாயகா உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் உத்தரவிட்டுள்ளார். இந்தஉத்தரவின்படி எந்தஒருடிஸ்திறிக்கிலாவது இருந்துவரும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து அல்லது உதவிஉணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து அனுமதிச்சீட்டுப்பெருமல் யாழ்பாணக் குடாநாட்டுக்குச் செத்தல்மிளகாய் கொண்டுவரமுடியாது.

## தொழில் நுட்பக் கல்லூரி

தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கென யாழ்ப்பாணத்திலே ஓர்உயர்தர தொழில் நுட்பக் கல்லூரியை அமைப்பதற்குக் கல்விமந்திரி பாராளுமன்றத்தில் அளித்தவாக்குறுதியை நடைமுறைக்குக் கொண்டுவருதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக அவர் இப்போது தெரிவித்திருக்கின்ருர். கொழும்பிலே இருப்பது போன்று, யாழ்ப்பாணத்திலும் உயர்தர அந்தஸ்தில் ஒருதொழில் நுட்பப்பயிற்சிக் கல்லூரி அமைப்பது அவசியமென்று தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தின் வருடாந்தபொதுக்கூட்டத்தில் நிறைவேறிய ஓர் தீர்மானத்தை ஆதரித்தே கல்விமந்திரி முன்சொன்னவாறு தெரிவிக்கலாயினர்.

## புதிய மேற்றிராணியார்

அரசாங்க கிளேறிக்கல்சேவை யூனியனின் திரிகோணமலைக் கிளைச்சபை சென்ற 5-ந் திகதி புதன்கிழமை நடத்திய ஓர்பிரிவுஉபசாரவிழாவிலே அதன் தலைவரான திரு. மெர்வின் சென் நிக்கலஸ் அவர்கள் பேசியபோது, "அரசாங்க கிளேறிக்கல்சேவை யூனியன் சிவில் உத்தியோகஸ்தர்களையும், கலாநிதிகளையும், பாராளுமன்றஅங்கத்தவர்களையும், வழக்கறிஞர்களையும், ஓர் மந்திரியையும் இதுவரை பிறப்பித்திருக்கிறது; ஆனுல், இன்றே ஓர்மேற்றிராணியாரைப் பிறப்பித்துள்ளது; கண்டிப் புதியமேற்றிராணியாராகச் சமீபத்திலே நியமனஞ்செய்யப்பெற்றவர் அரசாங்க கிளேறிக்கல்சேவை அங்கத்தவராவர்" எனக் கூறலாயினர்.

# பரலோகத்தில் இருந்துவந்த சமாதான திட்டம்

[டக்றர்ஜேம்ஸ் எவ். பீரிஸ் அவர்களால் எழுதப்பெற்றுக் ''கதலிக் மெசஞ்சர்''பத்திரிகையில் வெளிவந்தகட்டுரையின் தமிழாக்கம் அதிகம் நீடிக்குமென்பதை யிட்டு அதில்ஒருசிறுபகுதி விடப்பட்டது.]

"தெய்வீக அன்பு"என்ற அமெரிக்கசஞ்சிகையின் சமீபகாலபிரசுரம் ஒன்றிலே "கடவுளுக்குஎதிராக யுத்தம்"என்னும் தலையங்கத்துடன் வெளிவந்தகட்டுரையை வாசிக்கும் அதிர்ஷ்டத்தை நான்பெற்றுக் கொண்டேன். கிறீஸ்தவசேவை அப்போஸ்தலத்துவத்துக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்டிருந்த இந்தக்கட்டுரை இன்றையஉலகசம்பவங்களின் போக்குப்பற்றித் திகில் விளைக்கும் சில வெளிப்படுத்துதல்களைத் தெரிவிக்கின்றது. நான் எடுத்துக்கூறப் போவதின் சாராம்சமானது,சாத்தானுக்கு அதன் சொந்தவேண்டுகோளின்பேரிலே நம்முடைய திவ்விய கர்த்தரால்அருளப்பட்ட காலஎல்லையையும், இந்தக் காலஎல்லைக்குள்ளே உலகில் அதுசெய்யக்கூடிய அழிவையெல்லாம்செய்ய அனுமதிக்கப்பட்டதையும் கொண்டதாகும்.

இந்தக்கட்டுரை முக்கியமாக இரு சம்பவங்களை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. அவையாவன: பாத்திமாவின் செய்தியும், 13-ம்சிங்கராய பாப்பானவருக்கு அர்ச். மிக்கேல்சம்மனசானவர் அளித்தகாட்சியுமே. பாத்திமாசெய்தி தற்சமயம் உலகம்முழுவதும் அதிகம்நன்ருக அறியப்பட்டதொன்ருகும். ஆயினும், "பரலோகத்திலிருந்துவந்த சமாதானதிட்டம்"பற்றிச் சுருக்கமாக ஈண்டுஎடுத்துக்கூறுவது பயன் விளைப்பதாகும். ஏனெனில், அதன் முழுவிசேஷமும் எல்லோராலும் பூரணமாக அறியப்பட்டில்லை. பாத்திமாவிலே பரிசுத்ததேவதாயார் ஆசித்ததெல்லாம் பின்வரும் நான்கு குறிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

1. இயன்றமட்டும் அடிக்கடி செபம்— விசேஷமாய்ச் செபமாலை சொல்வது.

2. தபம்.

3. தமது மாசில்லா இருதயத்துக்கு உலகத்தை நேர்ந்து ஒப்புக் கொடுப்பது.

4. ஐந்து முதற்சனிக்கிழமைகளை அனுசரிப்பது. இந்தச்செய்தி பரிசுத்ததேவதாயாரால் 1917-ம் ஆண்டு பாத்திமாவிலே "கோவா டி இறியா" எனுமிடத்தில் அருளப்படலாயிற்று.

இந்தமூன்றுபிள்ளைகளிலும் மூத்தவளான லூஸியாசாந்தோஸ் என்று அறியப்பட்ட பெண்பிள்ளை கொய்ம்பருவிலுள்ள கார்மேல்சபைக் கன்னிகாமடம்ஒன்றில் இன்னுமே எம்முன் இருந்துவருகின்ருள். இச்செய்தி சம்பந்தமாய் அவள்இன்னுமே பெரும்பங்கு பற்ற விருக்கின்ருள். ஏனெனில், தேவதாயாரால் அருளப்பட்ட மூன்ருவதுஇரகசியத்தை அறிந்தவளாய் இந்தஉலகிலுள்ள ஒரேயொருஆள் இவளேயாவள். இந்த இரகசியம் முத்திரைபதித்த கடிதம்ஒன்றிலே லிஸ்பன்நகரின் கருதினல் பத்திறியாக்குவான டொன் ஜோஸ் செறெஜேய்ரோ ஆண்டவரால் தற்போது பேணிவைக்கப்பட்டிருக்கிறது. இது 1960-ம்ஆண்டில்தான் அவளுடைய அனுமதியோடு திறக்கப்படவிருக்கிறது. இந்தக்கடிதம் ஆதியில் லீய்றியாமேற்றிராணியாரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. இவர்அதனை இருபதுவருடங்களுக்கு மேற்பட்டகாலமாகப் பாதுகாப்பாக வைத்திருந்ததின்மேல் சிலவருடங்களின் முன் காலஞ்செல்லலாயினர்.



பாத்திமாவில் காட்சிபெற்ற
ஜசிந்தா, பிரான்சிஸ்கோ,
லூஸியா எனும்
மூன்று பிள்ளைகளும்
இங்கே காணப்படுகிருர்கள்.
இவர்களிலே
வலது புறத்தில் இருக்கும்
லூஸியாவே
இன்று சீவனே டிருக்கின்ருள்.

இந்தஇரகசியத்திலே அடங்கியுள்ளவற்றில் எதையாவது வெளிப்படுத்தமுடியுமா என்று லூஸியா கேட்கப்பட்டபோது, தான்கொடுக்கக்கூடிய ஒரேயொருபதில், அது "சிலருக்குச் சஞ்சலத்தையும், ஏனையோருக்குச் சந்தோஷத்தையும்" கருதுமென்று அவள்கூறினள். பாத்திமாசெய்தியிலே உலகத்துக்குப் பெரும்ஆறுதலைத் தருவதாயிருக்கும் விசேஷப்பட்ட அம்சம்யாதெனில், "இறுதியில் எனது மாசில்லாதஇருதயம் வெற்றிகொள்ளும்; ருஷியா மனந்திருப்பப்படும்; உலகில் ஓர் சமாதான சகாப்தம் உண்டாயிருக்கும்"என்று மூன்றுபிள்ளைகளையும் விட்டுப்போகுமுன் தேவதாயாரால் அவர்களுக்கு அழுத்தமாகக் கூறப்பட்ட வாக்கேயாகும்.

பாத்திமாசெய்தியுடன் தெய்வாதீனமாக ஓர்தொடர்பாயுள்ள இரண்டாவது விசேஷப்பட்ட அம்சம் யாதெனில், அர்ச். மிக்கேல்சம்மனசானவர் 13-ம்சிங்கராய பாப்பானவருக்கு அளித்தகாட்சியேயாகும். ஓர் நாள் திவ்வியபூசை நிறைவேற்றிய பின் 13-ம்சிங்கராய பாப்பானவர் சிலகருதினல்மாருடன் ஆலோசனைச் சங்கம் கூடியிருந்தார். அப்போது அவர் சடுதியாகப் பெரிதும்மூர்ச்சித்துத் தளத்திலேவீழ்ந்தார். துரிதமாக அழைக்கப்பட்டுவந்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே இறந்துபோய்விட்டதாகப் பயந்தார்கள். ஏனெனில், அவரது நாடித்துடிப்பின் அறிகுறிதனையும் கண்டுகொள்ள முடியாதிருந்தது. ஆயினும், சிறிது வேளையின்பின் பரிசுத்தபிதா குணப்பட்டுத் திரும்பவும் சுயஅறிவு வந்தபின் பெரிதும் உணர்ச்சிவேகத்துடன் "ஓ! நாம்கண்டுகொள்ள அனுமதிக்கப்பட்டது, என்னஒருபயங்கரமான காட்சி"என்று பின்வருமாறு விளக்கிக் கூறினர்.

திருச்சபையை அழித்தொழித்துவிடுமாறு தீயஅரூபிகளான பிசாசுகளின் பிரமாண்டமான எத்தனத்தையும், அவற்றின் சதியாலோசனைகளையும் காட்சியில் நாம்காண்பிக்கப்பட்டோம்; இந்தக்காட்சியின்மத்தியிலே அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசானவர்தோன்றிச் சாத்தானையும், அவன்சேனையையும் திரும்பவும் நரகபாதாளத்தில் தள்ளிவிட்டதைக் கண்ணுற்றபோது, நமக்குண்டாயிருந்ததிகில் குறைவதாயிற்று" என்பதே பாப்பானவர் கூறியதாகும். இதுநிகழ்ந்து சிறிதுகாலத்தின் பின்னரே 13-ம்சிங்கராயபாப்பானவர் அர்ச். மிக்கேல் சம்மனசானவரின் பிரசித்திபெற்ற செபத்தைஆக்கித்தந்து, அப்போது தொடக்கம் உலகமுழுவதிலும் ஒவ்வோர்தனிப் பூசையின்முடிவிலும் அதுசொல்லப்படவேண்டுமென்று கற்பித்தார்.

இச்சம்பவம் மற்ருேர்விதமாகப் பின்வருமாறு சொல்லப்படுகிறது— ஓர்நாள் 13-ம்சிங்கராய பாப்பானவர் ஒருசிலகருதினல்மாரும், வத்திக்கான் அதிகாரசபை அங்கத்தவர்களும் சமுகமாயிருந்த தமதுபூசையை முடித்தபோது, திடீரெனப்பலிபீடத்தின்அடியிலே நின்ருர். ஏதோபரவசம் அடைந்தவர்போல் ஏறக்குறையப் பத்துநிமிஷங்களாக அங்கே அவர்நின்ருர். அவர்வதனம் வெளிறி வெண்மையாயிற்று. பின்னர்சிற்ருலயத்திலிருந்து உடனடியாகத் தமது காரியாலயஞ்சென்று சம்மிக்கேல் சம்மனசானவரின்செபத்தை ஆக்கித்தந்து, சகல தனிப்பூசைகளின் பின்னும் அது சொல்லப்படவேண்டுமென்று உத்தரவிட்டார். என்ன நிகழ்ந்ததென்று பிந்த அவரைக் கேட்டபோது, "பலிபீடத்தின் அடியைவிட்டு நாம்வெளியேறவிருந்தபோது, சடுதியாகநாம் இருகுரற்தொனிகளைக் கேட்டோம்; அவற்றில்ஒன்று அன்பும், சாந்தமும்உள்ளதாயிருந்தது. மற்றது, கடுமையும், முரட்டுத்தனமும் உடையதாயிருந்தது; திவ்வியநற்கருணைப் பேழைக்குச்சமீபத்திலிருந்து அவைகள்வருவதாகத்தோன்றியது; நாம் அவதானமாக அவற்றிற்குச் செவிசாய்த்தபோது பின்வரும்சம்பாஷணை நடைபெறக்கேட்டோம்;

"அந்தக்கடுமையான குரற்தொனி — ஆண்டவரைநோக்கிச் சாத்தானின் அகந்தையான வீம்புபேசும் அந்தக்குரற்தொனி—"உம்முடைய திருச்சபையைநான்அழித்துவிடமுடியும்"என்று பிறந்தது.

"நமதுஆண்டவரின் சாந்தமான குரற்தொனியிலோ "உன்னல் முடியுமா? சரி, போய் அப்படியேசெய்" என்று பிறந்தது.

அதற்குச்சாத்தான், "அப்படிநான் செய்வதற்கு அதிககாலமும், அதிக வல்லபமும் எனக்குவேண்டும்."

அப்போது ஆண்டவர் "எவ்வளவு காலம்? எவ்வளவுபலம்? என்ருர்.

"சாத்தான், 75வருடம்; அத்துடன் எனதுசேவைக்குத் தங்களைக் கையளிக்கக்கூடியவர்களுக்குமிகுந்த வல்லபம்" அளிக்கவேண்டும்.

"ஆண்டவர், நீ கேட்டகாலத்தை உனக்குத் தருகின்ருேம்; நீ கேட்ட வல்லபத்தையும் உனக்குத்தருகின்ருேம்; நீ விரும்பியதைச் செய்யலாம்."

தனது நோக்கத்தை— அதாவது அழிவுவேலையைப் பூர்த்திசெய்வதற்கு ஓர்காலஎல்லையும், இந்தஅழிவு வேலைக்குத் தங்களை அர்ப்பணஞ் செய்யும் மனிததூதர்கள்மூலம் தீமையைப் பரப்புதற்கான பெரும் வல்லபமும் அந்தக்கணமுதலே சாத்தான் அருளப்பட்டானென்று 13-ம் சிங்கராயபாப்பானவர் தெளிந்து கொள்ள விளக்கம்அருளப்பட்டது. ஆன்மாக்களைக் கெடுப்பதிலே தீமையின்பலங்கள் அடைந்துள்ள பெரும் வெற்றிகளாலே கடந்தபலவருடங்களிலும் ஏற்பட்டுள்ள பயங்கரவிளைவுகளெல்லாம் தாங்களாகவே மனங்கொண்டுமுன் வந்த அநேகமனிததூதர்களைச் சாத்தான் தனது கையாட்களாகக் கொண்டிருக்கிறதென்பதற்குப் போதியசான்ருகும். மேலும்சாத்தான் தனக்குஅருளப்பட்ட காலஎல்லையின் இறுதியிலே தனதுநோக்கத்தைப் பூர்த்திசெய்திராவிடில் அவன் முன்னிலும் மிக மோசமாக அடக்கியொடுக்கப்பட்டு மகாஇழிவுக்குரிய கேவலமான தோல்வியடைவானென்றும் 13-ம் சிங்கராய பாப்பானவருக்கு மேலும் விளக்கம் அருளப்பட்டது.

---

## பண்ணைக் கடற்பாலம்

பண்ணைக்கடற் தாம்போதிவேலையை விரைவிலே செய்துமுடிக்கும்படியாக அரசாங்க கட்டடவேலைப்பகுதிமந்திரி உத்தரவிட்டிருக்கிருர். ஊர்காவற்றுறைக்கும் புதியபட்குப்பாதை ஒன்றை அனுப்பும்படியும், பண்ணைக்குப் புதியபடகுப்பாதைகள் இரண்டைத் தயாரிக்கும்படியும் அவர்தெரிவித்திருக்கின்ருர். ஊர்காவற்றுறைக்குக் கடல் மார்க்கமாகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல இருலோஞ்சுகளும் கொடுக்கப்படவிருக்கின்றன. ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையாஅவர்கள் கடந்தஇருமாதங்களாக எடுத்துக்கொண்ட முயற்சியின்விளைவே இவையாகும்.

# கம்யூனிஸத்தின் சென்ம சத்துராதியான சுதந்திர மேற்குஜேர்மனி

குன்றுகள்சூழக் குதூகலத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்த ஹய்டெல்பேர்க் நகரிலிருந்து ஆடிமாதம் 7-ந்திகதியன்று றெயின்மார்க்கமாக மேற்குஜேர்மனியின் தலைப்பட்டணமான பொன்நகரைநோக்கிப் பிரயாணம்செய்தோம். மிகவேகமாகஓடும் மின்சார றெயின்வண்டியில் பிரயாணம் செய்ததால் வழியில்அலுப்பேதோன்றவில்லை. றெயில்பாதையின் இருபுறங்களிலும் இயற்கைத்தேவி பசுமை உடைதரித்தவளாகக் களிநடனம் புரிந்துகொண்டிருந்தாள். ஒருபக்கம் திராட்சைத்தோட்டங்கள் நிறைந்த அழகியமலைத்தொடர்கள். மற்றொருபுறம் மலைகளும், மரங்களடர்ந்த வனங்களும் நெஞ்சைஅள்ளின. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒரேபசுமைதான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக றெயில்பாதையை அடுத்துப் பலமைல் நீளத்துக்குச் சிலுவென ஓடிக்கொண்டிருந்தாள் 'றைன்'நதியாகிய பெண். ஜேர்மனியிலுள்ள பலநகரங்களுக்கு 'அவள்' தனிஅழகை அள்ளித் தந்துகொண்டிருக்கிறாள். 'அவள்'மேனி சிலுசிலுக்கப் பலநீராவிப்படகுகள் சென்றுகொண்டிருந்தன. சிற்சில இடங்களின் நடுவில் 'றைன்'நதிஓட, அதன் இருபுறங்களிலும் றெயிற்பாதைகள் காணப்பட்டன. நாம்'பொன்' தலைநகரின் றெயில்வே நிலையத்தை அடையும்வரை எமதுகண்களுக்கு 'றைன்'நதி விருந்தளித்தது. அதன் கரையோரமாக அமைந்துள்ள அந்த றெயில்பாதையில் பிரயாணம் செய்தபோது நமதுஇலங்கையிலுள்ள கடற்கரையோரறெயில்பாதையே எனது ஞாபகத்திற்குவந்தது. பொதுவில் இயற்கைக்காட்சியின் கவர்ச்சியினால் பொழுதுபோனதே தெரியவில்லை.

### பொன்தலைநகர்

பொன்நகர் மிகப்பெரியதென்று சொல்வதற்கில்லை. யுத்தசேதத்திற்குள்ளான பலவிடங்களை இங்கும் புதுப்பித்திருக்கிறார்கள். ரேகைரேகையாய்ச்செல்லும் அழகிய பலவீதிகள் இந்நகருக்கு அழகுதருகின்றன. பொதுவிடங்களில் தனித்தனியாக அழகியகூடாரங்களிலே பலஉணவுப் பொருள்களையும், காய்கறி, பழவர்க்கங்களையும் விற்கும்கடைகள்பல திகழ்கின்றன. கடைத்தெருக்களில் பொருட்கள் அழகாகநிறைய அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தெருக்களில்போய்வரும் மக்களின்முகத்திலே மகிழ்ச்சிரேகை படர்ந்திருக்கிறது. ஜேர்மன் மக்கள் யுத்ததினால் பாதிக்கப்பட்ட கஷ்டத்திலிருந்து சிறிதுசிறிதாக மீண்டுவருகிறார்கள் என்பதையே அம்முகச் சவிடைகாட்டியது.

பொன்நகரில் 'பிறஸ்கிளப்' (பத்திரிகைக்காரர்கிளப்)ஒன்று இருக்கிறது. இதன்கட்டடம் அழகியது. உள்ளே கிளப்பைச்சேர்ந்த ஒருசைத்திரீகரால் எழுதப்பட்ட பலசித்திரங்கள் சுவரில் மாட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் கட்டடத்தின் உள்அறைக்குத் தனிவனப்பைத் தருகின்றன. இந்தப் 'பிறஸ்கிளப்'கட்டடத்திலே பொன்நகரிலுள்ள அரசாங்க செய்திஅலுவலகத்தைச்சேர்ந்த முக்கிய உத்தியோகஸ்தர்கள் எம்மைவரவேற்றுப் பகல்விருந்தளித்து உபசரித்தார்கள். அன்று அதேகட்டடத்தில் மேற்குஜேர்மனியைச்சேர்ந்த முக்கிய பத்திரிகைப்பிரதிநிதிகள், நிருபர்கள், ஆசிரியர்கள் எமக்கு இரவுவிருந்தளித்து உபசரித்தார்கள். அப்பொழுது அவர்களுடனும், வேறுபல உத்தியோகஸ்தர்களுடனும் அளவளாவி ஜேர்மனியின் உண்மைநிலையை அறிந்துகொள்ளும்வாய்ப்பு எமக்குக்கிடைத்தது. பேர்ளின்பிரச்சினையும், கிழக்கு — மேற்கு ஜேர்மனிகளுக்குள்ள அடிப்படையான வேற்றுமையும் சம்பாஷணையின் போது இடம்பெற்றன. ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டு மேற்குவல்லரசுகளின் பக்கஉதவியுடன்நிற்கும் மேற்குஜேர்மனி கம்யூனிஸ்தஅடிப்படையில் ஆட்சிநடதித்வரும் கிழக்குஜேர்மனிக்குத் தலைவணங்குமெனத் தோன்றவில்லை. நாம்சந்தித்துப்பேசிய பலமுக்கிய ஜேர்மனியர்கள் இதுவிஷயமாய்க் கண்டிப்புக்காட்டியதை அறிந்தோம். பெரியவல்லரசுகளிடையே ஒருமுடிவு வராதவரையில் ஜேர்மன்பிரச்சினை சுமுகமாகத் தீராதென்றே தோன்றுகின்றது.

'பொன்நகரிலுள்ள மேற்குஜேர்மனியின் வெளிநாட்டுமந்திரிசபைக் காரியாலயத்திற்கு நாம் அழைத்துச்செல்லப்பட்டோம். வெளிநாட்டுஅரசாங்க பகுதியைச்சேர்ந்த முக்கியஉத்தியோகஸ்தர்கள் ஜேர்மனியின் வெளிநாட்டுக் கொள்கையையும், ஜேர்மனியின் ஐக்கியப்பிரச்சினை, பேர்ளின்நகரப் பிரச்சினை ஆகியவைபற்றி விளக்கினார்கள். அவர்கள் பேச்சிலிருந்து மேற்குஜேர்மனி, கிழக்குஜேர்மனியின் இழுப்புக்கு இசைந்துபோகாதென்பது விளக்கமாயிற்று.

அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், மகாயுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியவர்களின் நலனுக்காக உள்ள மந்திரிசபைக் காரியாலயத்தைச் சேர்ந்த முக்கியஉத்தியோகஸ்தர் திரு. மிஷல்மனைக் கண்டோம். அவர் மேற்குஜேர்மனி பலவகையான அகதிகளுக்குப் புதுவாழ்வு அளித்துவருவது பற்றிய புள்ளிவிபரங்களை எடுத்துக்

"வீரகேசரி"

ஞாயிறு இதழ் ஆசிரியர்

**திரு. வி. லோகநாதன் அவர்கள்**

கூறினர். வெளிநாடுகளைச்சேர்ந்த அகதிகளுக்கும் வித்தியாசமின்றி உதவிஅளிக்கப்படுகிறது. வெளிநாட்டவர்கள் ஐந்துவருடம் வாசஞ்செய்தபிறகு மேற்குஜேர்மனியின் பிரசாஉரிமையைப் பெறலாமென்றும், அவர்கள் மற்றஜேர்மனியர்களைப்போலச் சகல உரிமைகளையும் பெற்றுவாழலாமென்றும் அறிவிக்கப்பட்டது. பின்னர் ஜேர்மனியின் சகலபிரச்சினைகளையும் கவனிப்பதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் மந்திரிசபைக் காரியாலயஞ் சென்று அங்குள்ள முக்கியஉத்தியோகஸ்தர்களைச் சந்தித்தோம். அவர்களும் அம்மந்திரிசபையின் அலுவல்களையும், அகதிகளைக்கவனிக்கும் விதங்களையும், பேர்ளினின் இன்றையநெருக்கடியான நிலைமையையும்பற்றி விளக்கினார்கள். இதிலிருந்துமுடிவாக ஒன்றுநிச்சயமாக விளங்கியது. அதாவது, மேற்குஜேர்மனியஅரசாங்கம் கம்யூனிஸ்தபோக்கை முழுவதும் வெறுக்கிறதுஎன்பதே. கிழக்குஜேர்மனியின் கம்யூனிஸ்தஆட்சியையும் அதுகண்டிக்கிறது. பேர்ளின்நகர் விஷயமாய்க் கிழக்குஜேர்மனிக்கோ, ருஷியாவின் ஆதிக்கத்திற்கோ, செல்வாக்கிற்கோ அது துளியளவேனும் இடம்கொடுக்கவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிந்தது. "நாம் பேர்ளின்நகரை இன்னும் ஜேர்மனியின் தலைநகராகத்தான் கருதுகிறோம்; இப்பிரச்சினையிலேவிட்டுக் கொடுக்கமாட்டோம்"என்று பலஜேர்மனியர்கள் எம்மிடம்அறிவித்தார்கள்.

---

# பூசுரர்க்களித்த பொன்வரவு

1913-ம்ஆண்டு இலங்கையிலுள்ள அமலோற்பவமரியநாயகி குருபரித்தியாகிகளைத் தரிசிக்கவந்த அச்சபைஅதிசிரேஷ்டரான மகாமேன்மைதங்கிய டொன்ரென்வில் அதிமேற்றிராணியாருக்குச் சந்தியோகுமையோர் பெண் பாடசாலையில் ஓர்வரவேற்புஉபசாரம் நடந்தேறியது. அங்கேஅவர் வீற்றிருந்த உயர்மேடையின் சொர்ணமய தோற்றத்தையும், அரசசிம்மாசனம் போன்ற அதன் சோபிதாலங்காரத்தையும் அவதானித்த ஆண்டகையவர்கள் அதனைநிர்மாணித்த சிற்பியின் திறமையைப்பாராட்டிப் புகழ்மாலை சூட்டிநின்றார். அந்தப்போன மேஸ்திரியார் பிலிப் தம்பிமுத்து அவர்களின் பௌத்திரனே றோமாபுரியில் வேதசாஸ்திரம்கற்று, அமலோற்பவ மரியநாயகிசபைக்குருவாக அபிஷேகஞ் செய்யப்பெற்றுத் தமதுசென்மபதியிலே தம்முடைய முதற்பாடற்பூசையை நிறைவேற்றுதற்காகச்சென்ற 31-7-59 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த வண. பிலிப் அந்தோனிப்பிள்ளைசுவாமியவர்கள்.

பரிசுத்தபுதுமைத்தாயாரின் ஆலயத்திலே அன்றுபிற்பகல் 5-30மணிக்கு நடைபெற்ற தேவதோத்திரஆராதனையுடன் ஆரம்பமான வரவேற்புஉபசாரம் இளவாலை, சென் ஹென்றீஸ்கல்லூரி அதிபர் வண. எல். ஏ. சிங்காரயர்சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறியது. பாலகிகளின் மங்கலவரவேற்புப் பாவோசையின்பின் ஆசிரியர் எஸ். சூசையாஅவர்களால் வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன்மேல் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்களும், வண. தலைவர் சுவாமியவர்களும் புதியகுருவரையும், அவரின்தந்தையார் மேஸ்திரியார் என். பி. மாணிக்கத்தம்பியவர்களின் குடும்ப விசேஷங்களையும், புதியகுருவர் றோமாபுரியிலே மகாவிசேஷப்பட்ட சம்பவங்கள்நிறைந்த காலத்தில் தங்கியிருந்ததையும், அதனால் அவர்பெற்றுள்ள அதிர்ஷ்டத்தையும் எடுத்துக்கூறி வாழ்த்துக்கூறியதன்மேல் புதியகுருவருக்குப் பலஅன்பளிப்புகள் வழங்கப்பெற்றன. ஈற்றில், புதியகுருவர்எழுந்து தமதுகுருத்துவத்தை மகிமைப்படுத்திய சகலருக்கும் நற்புத்திகூறி ஆசிஈந்தார். இத்துடன்புதுமைமாதாகோவிற் கிறிஸ்தவர்களின் பொதுவரவேற்பு நிறைவாயிற்று.

மறுநாள் சனிக்கிழமைகாலை புதுமைத்தாயாரின் பொன்னாலயமும், அதன்முன்றிலும் மக்களால்நிறைந்திருக்க, பலகுருமார், கன்னியர் சமுகத்திலே புதியகுரவர் தமதுசகோதாகுரவர் வண. சி. எல். பனிமயம் சுவாமியாரும், ஆசனக்கோவில் உதவிக்குரவர் வண. பி. ஈ. செல்வராஜாசுவாமியாரும் துணைபுரியத் தமது முதலாவதுபெரியபாடற்பூசையை ஆரம்பித்தார். சுவிசேஷத்தின்பின் மாதகல்கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம்சுவாமியவர்கள் செய்தபிரசங்கத்திலே குருத்துவத்தினால்நிகழும் புதுமைகளையும், குருமார்மட்டிலே கிறிஸ்தவர்களுக்குள்ள கடமைகளையும் எடுத்துக்காட்டிப் பசுமரத்தாணிபோல் பதியவைத்தார். பூசைமுடிந்தபின் குரவரின் அபிஷேகதிருக்கரத்தை விசுவாசிகள் முத்தமிட்டு ஆசிபெற்றார்கள். தமது ஞானத்தந்தையாரான திரு. ஜே. ஜேம்ஸ் மனுவேற்பிள்ளை தம்பதிகளுக்குப் புதியகுரவர் தமதுமுதலாசியீந்ததும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

மேஸ்திரியார் என். பி. மாணிக்கத்தம்பி தம்பதிகளும், அவர்களின்மக்கள் மருமக்களும் விடுத்த அழைப்பின்பேரில் சமுகம்கொடுத்த மக்களால் அன்று சாயந்தரம் ஆலயமுன்றில் பெருந்திரளானமக்களால் தேங்கியிருக்க, இணைத்தலைவர்களாகயாழ்மாநகரசபை மேயர் திரு. அல்பிறெட் ரி. தங்கராஜா துரையப்பாஅவர்களும், செவாலியர் டக்றர்சென்ஜோண் புவிராஜசிங்க அவர்களும் உபசரணைவிழாவிற்குத் தலைமைவகித்தார்கள்.

பீடிகையாக ஆசிரியர் பி. எம். ஞானப்பிரகாசம்அவர்களால் இயற்றப்பெற்ற சித்திரப்பாக்கள் இசைமணி ஆசிரியர் செல்வத்துரைஅவர்களால் கனிவாகப்படிக்கப்பெற்றன. அதன்மேல் வண. ஜே. பி தேவராஜாசுவாமிகள், ஆசிரியர்கள் திரு. குணரத்தினம், திரு. மூர்த்தி, பண்டிதர் செல்வராசா முதலியோர் புதியகுரவரின் பெற்றார் சகோதாது விசேஷங்களையும், அவர்கள் சித்திரக்கலையினால் யாழ்ப்பாணத்துக்கு ஆற்றியசேவையையும, குருத்துவமேன்மையையும் எடுத்துக்காட்டிச் சிற்றுண்டிஉபசரணைமத்தியில் சொற்பொழிவுண்டியளித்துச் சபையை மகிழ்வித்தார்கள்.

ஈற்றில், புதியகுரவர்எழுந்து, தாம் ஐரோப்பாவில்கண்ட, கற்றவிசேஷங்களையும், இலங்கைமட்டில் இத்தாலியருக்குள்ள நன்மதிப்பையும், தாய்நாட்டிலே தமக்குண்டாயிருந்ததாகத்தையும்பற்றி அன்பொழுகப்பேசி யாவரையும்வாழ்த்திநின்றார். அதன்மேல் அந்தசமுகம்தந்த யாவருக்கும், பாவியற்றிய ஆசிரியருக்கும், அதனைப் படித்த ஆசிரியருக்கும், சொற்பொழிவாற்றியவர்களுக்கும், தலைமைதாங்கிய மேயருக்கும், செவாலியருக்கும், விசேஷமாய் அமலோற்பவமரியநாயகி சபைக்கும், மற்றும் புதியகுரவரை உருவாக்குவதிலேபிரயாசை எடுத்துக்கொண்ட குரவர்கள் அனைவருக்கும் தமதுசகோதரர்சார்பாகத் திரு.எல்.சி. பொன்னுக்கோன்அவர்கள் நன்றித்துதிகூறினர்.

ஈற்றில், தலைமைவகித்தவர்களில் ஒருவரான செவாலியர் டக்றர்சென் ஜோண்புவிராஜசிங்க அவர்கள் அக்களிப்பானமுறையிலே புதியகுரவரின் பேரனான மேஸ்திரியார்தம்பிமுத்துஅவர்களின் சித்திரச்சிறப்பையும், அவர்மைந்தர் மாணிக்கத்தம்பி மேஸ்திரியாரின்சிறந்தசித்திரக்கலை அவரின்குருபுதல்வரான புதியகுரவரிலே இருப்பதையும் எடுத்துக்காட்டிப் பேசி உபசரணைமுடிவிலே உற்சாகமூட்டி யாவரையும்மகிழச்செய்தார். பின்னர் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் உபசரணைமுற்றுப்பெற்றது.

—நிருபர்

---

**இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். —அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்**



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே !*

முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன்னர் தொழிலற்றசிலர் கோயிலொன்றைக்கட்ட ஆரம்பித்தனர். ஆனால், அது முடிவுபெறுமென ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. காண்பவர்கள் அதைக் "கத்தோலிக்க மடமைத்தனம்" எனப் பெயரிட்டுப் பரிகசிப்பார்கள்.

சுரங்கத்தொழிலாளர் பகுதியிலுள்ள இக்கோயில் 1923இல் ஆரம்பமாயது. பஞ்சம்ஏற்பட்டு வேலைக்குத் திண்டாடியவர்களுக்கு அங்குள்ள பங்குக்குரவர் அக்கோயிலைக்கட்டிச் சொற்பமாவது உழைக்கும்படி செய்தார்.

பாறையிலிருந்து கல்உடைத்து ஒவ்வொன்ருய்ச் சுமந்துகொண்டு வருவார்கள், கோயில்கட்டப் பணங்கிடைத்தபொழுது. அங்கு வேலைசெய்தவர்களில் ஜிம்மி மொயர்ஸ்எனும் பள்ளிமாணவனும் ஒருவன். அவன் அங்கு வேலைசெய்து கட்டடநுட்பக் கலையைநன்கு கற்றுக்கொண்டான்.

பஞ்சம்நீங்கி நாட்டில் பணம்பெருக, கோயில்வேலை செய்தவர்கள் எல்லாரும் வேறுதொழிலுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், ஜிம்மிமட்டும் தனித்துவிட்டான். அதைவிட்டு நல்லவேலையாகப்பார்த்து ஒன்றில்சேரும்படி அவனுடையநண்பர் ஏவினர். ஒருபோதும் முடிவுபெருத கோவில் வேலையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பது வீணக்கேடு என்றனர்.

கட்டட நிலையத்திற்குள் காட்டத்திமரம் ஒன்று ஒன்பதுஅடிஉயரம் வளர்ந்துவிட்டது. பற்றைகளும் ஆங்காங்கு காணப்பட்டன. இடிந்துபோன புராதனகட்டடம்போல் காட்சியளித்தது அந்தக்கோயில். ஜிம்மியின் மனதில் சந்தேகப்பேய் குடிகொண்டுவிட்டது. ஆனால், அவனதுவிடாமுயற்சியைக் கண்டசிலர் பாறையிலிருந்த கற்களைக்கொண்டுவர உதவினர். கற்களைப் பொழிந்தான் ஒவ்வொன்ருக. படிப்படியாகக் கல்பொழிந்து, சித்திரஞ்செதுக்குவதில் நிபுணன் ஆகினன். வேண்டிய நூல்களையும் படித்துச் சிற்பசாஸ்திரியானன். பலஇடங்களுக்குச்சென்று, கோயில்களையும், மடங்களையும்பார்வையிட்டு, அவைகளிலுள்ள சிற்பநுட்பங்களைக் கற்களிற் பொழிந்தான். அவைகள் எல்லாவற்றையும் அந்தக்கோவிலின் 36 வில்லுகளிலும், தூண்களிலும் காணலாம்.

பல ஆண்டுகளின்பின் இருவர் அவனுக்குத்துணையாக வந்துசேர்ந்தனர். கட்டடவேலை சற்றுத்துரிதமாக நடந்தது. அப்பங்கிற்குச்சேர்ந்த மக்களின்தொகை அதிகரித்ததாலும், தற்காலிகமாக உபயோகித்துவந்த கோயில் சிறிதாகவிருந்ததாலும் ஒப்பந்தகாரரிடம் வேலையை ஒப்படைக்க வேண்டியதாயிற்று இருஆண்டுகளின் முன்னர்.

ஜிம்மியின் விடாமுயற்சியை என்னென்பது.

அண்ணை.

—✻—

## பங்குக் குருக்களின் பாதுகாவலர்

அந்நியன்ஒருவன் அமெரிக்காவிலிருந்து ஆயிரம் மைல்தூரம் பிரயாணஞ்செய்து அலுப்புடன் பிரான்சிலுள்ள ஆர்ஸ்கிராமத்தில் வந்துசேர்ந்தான். இவன் ஏன் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்தான்? பாவசங்கீர்த்தனம் செய்வதற்காகவே இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து இப்பெரிய பயணத்தைச் செய்தான் இதைக்கேட்டு நீங்கள் அதிசயப்படுவீர்கள்.

இவன் தன்னுடைய தேசத்திலே பாவசங்கீர்த்தனம் பண்ணியிருக்கலாம். ஆனால், இவன் தேடிவந்தது தான்விரும்பிய பங்குக் குருவானவரையே. அவர்தான் வண. சுவாமி யோண் வியான்னி இவரிடம் பாவசங்கீர்த்தனம்செய்ய அவன் விரும்பினன். இது அதிசயமல்ல. எனெனில், அமெரிக்கர் போன்ற ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வண. யோண் வியான்னி சுவாமியாரிடம் பாவசங்கீர்த்தனத்திற்கு வருவார்கள். யார் ஆர்ஸ்கிராமத்தின் பங்குக்குருவானவர் அவரிடம் ஆயிரக்கணக்கானேர் பாவசங்கீர்த்தனத்துக்கு ஏன் வர வேண்டும்?

175ஆண்டுகளுக்குமுன் லியோன்ஸ் பட்டணத்தின் அருகாமையிலுள்ள ஒருகுக்கிராமத்தில் நல்லபக்தியுள்ள குடும்பத்தில் யோண் பிறந்தார். பெற்றேர் யோணைத் தேவபக்தியில் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்தார்கள். யோணின் குழந்தைப் பருவத்தில் கொடியவேதகலாபனை நடந்தது. அந்நாட்களில் தேவனை ஆராதிப்பதென்றல் இறப்பதற்கே வழிதேடுவதாயிற்று. வியான்னியின் குடும்பம் ஒருநாளைக்குக் கிட்டங்கியிலும் மற்றநாளைக்கு அடுத்தவீட்டுச் சமையற்கூடத்திலும் பூசைப் பலியைக் காண்பார்கள். எவ்வளவு இன்னல்கள் நேர்ந்தாலும் அவர்கள் பூசைப்பலிக்குச் சமுகமளிக்கத் தவறுவதில்லை. யோண் முதல்நன்மை பெற்றது ஒருஇருட்டறையில் பூசை நடந்தபோது.

யோண் ஒருவாலிபஞக வளர்ந்துவிட்டான். இதற்குள் வேதகலாபனையும் ஒரளவு ஒழிந்துவிட்டது. தேவ ஆலயங்கள் யாவும்திறக்கப்பட்டுப் பகிரங்க ஆராதனைகள் செய்யக் கூடியதாகிவிட்டது. யோண் ஒரு குருவாகவர ஆசித்தார்; இவ்வாசையைத் தனது நண்பரான வண. பெலிசுவாமியாரிடம் கூறினர். இது கேட்டதும் சுவாமியார் ஆனந்தங்கொண்டார். யோணைப்பற்றி அவருக்கு நன்ருகத்தெரியும் யோண் நன்ருகப் படிக்காவிட்டாலும் கல்வி கற்க இன்னும் வயதுண்டு. ஆனல், அதைவிட யோணிடம் ஒருவிசேஷ குணம் இருந்தது. அதுயாதெனில் அவர்தேவனை அதிகமாக நேசித்தார். தேவசித்தத்திற்குக் கீழ்ப்படிந்த ஓர் உத்தம கத்தோலிக்கனுக விளங்கினர். இவ்வரியகுணங்கள் யோணிடம் அமைந்திருப்பதால் ஒருஉண்மையானகுருவாக விளங்குவார் என்று பெலிசுவாமியார் முடிவுசெய்தார்.

பெலிசுவாமியார் யோணை ஒருகுருமடத்தில் சேர்த்துவிட்டார். ஆனல், பெலிசுவாமியாரின் மனக்கோட்டைகள் தகர்க்கப்பட்டன. ஏனெனில், யோண் படிக்கவும் மாட்டான், இவன் ஒருகுருவாக வரவும்மாட்டானென்று குருமடத்து மேற்பார்வையாளர் திட்டமாகக் கூறியதுமல்லாமல், யோணை வீட்டிற்கே அனுப்பிவிட்டார்கள். இதையறிந்த பெலிசுவாமியார் யோணைத் தம்முடன் அழைத்துச் சென்ருர். அவரை நன்ருகப் படிப்பித்தார். கடைசியில் யோண் ஒரு குருவானுர். முதன்முதலாக யோண் வியான்னி சுவாமியாரைப் பெலிசுவாமியாருக்கு உதவியாக அனுப்பினுர்கள். பின்பு ஆர்ஸ் கிராமத்தின் பங்குக்குருவாக நியமனம் பெற்ருர். ஆங்குதான் தமது திருத்தொண்டை, சிறப்பாகப் பாவசங்கீர்த்தனத்தின் மூலமாக ஆன்மாக்களை அர்ச்சிக்கும்பணியை நிறைவேற்றினுர்.

—✻—

## பங்குக்குருக்களில் மட்டி—
### இப்பொழுது
## பரம வழிகாட்டி

(சென்றவாரத் தொடர்ச்சி)

### வெறும் பட்டம்

"சங்கைச்சேனையின்பரிமேலர்" என 3-ஆம் நெப்போலிய சக்கிரவர்த்தி வியான்னிசுவாமியாருக்குப் பட்டஞ்சூட்டிக் கௌரவித்தான். ஏழைகளுக்குப் பங்கிடக்கூடியபணம் அப்பட்டத்துடன் சார்ந்ததல்லவெனவும், அது வெறும்பட்டமெனவும் கருதினுர் சுவாமியார். இச்சந்தர்ப்பத்தில் ஊர்த்தலைவரும், குறித்த சேனைத்தலைவரும் சுவாமியாரைச் சந்திக்கவந்தனர். இவர்களுடைய வரவினுல் வியான்னிசுவாமியார் மருண்டுவிடவில்லை. "ஏதோ உடல் எடுத்த உயிர்கள்" என்றுமாத்திரம் பதிலிறுத்தார், அவர்கள்சென்றபின்.

### கடுந்தபம்

குருமனையில் சமையல், மற்றும்சில்லறை அலுவல்களைக் கவனித்துவந்தாள் ஜான் மரிசனே. "அவர் தபத்திற்காக உபயோகித்த கருவிகளைச் சிறப்பாகக் கசையை நான்கண்டிருக்கிறேன். அது மூன்று இரும்புச்சங்கிலிகளால் ஆனது. நுனிகளில் இருப்புத்துண்டங்கள் அல்லது திறப்புக்கள். அவருடைய உடைகள் பலமுறை இரத்தம் தோய்ந்திருக்கக் கண்டிருக்கிறேன். சீழ்அடையாளங்களும் இருந்தபடியால் அவருடைய தேகத்திலிருந்தகாயங்கள் பெரிது என்றே எண்ணவேண்டும்" எனச் சாட்சிபகர்ந்தாள்.

"நாரியை நோகவைக்கும் கட்டிலில் துயில்கொள்ளுவார். காலையில் மெத்தையை விரித்துவிட, மாலையில் அதைச்சுருட்டி வேறிடத்தில் வைத்துவிடுவார். ஆகவே, அதைவிரிக்காமலே விட்டுவிடுவேன். தலையணை மென்மையானது. ஆயினும், அதில் உள்ள சோளம்இலை அதிகம்என ஒவ்வொன்ருகஎடுத்து எறிந்துவிடுவார்; அல்லது நெருப்பிலிடுவார். அதைத்தடுக்கத் தலையணையின் வாயை இறுக்கமாகத் தைத்துவைத்தோம். ஆயினும், அவர் அதைக் குலுக்கி இலைகளை ஒருமூலைக்குள் ஒதுக்கிவிடுவார். ஆகவே, அவருடையதலைக்கும், கட்டில்பலகைக்கும் இடையில் தலையணைச் சிலைமட்டுந்தான் இருக்கும்."

### சொற்ப உறக்கம்

இத்தகைய "அரச மஞ்சத்தில்" எப்போதும் துயில்கொண்டார், சில மணித்தியாலங்கள் மாத்திரம். நன்

(அடுத்தபக்கம் பார்க்க)

—✻—

## மரணத்துடன்
## பந்தய ஓட்டம்

1777-ம்ஆண்டு புரட்டாசிமாதம் மிகவும் சூடானகாலம். ஒகியோஆற்றங்கரையோரத்தில் எல்லாம்அமைதியாய் இருந்தது. அவ்வாற்றங்கரையில் புதிதாய்க் குடியேறியவர்களை 500 இந்தியருக்குமேல் சேர்ந்து தாக்கினுர்கள்; தாக்குண்டவர்களில் அரைவாசிப்பேர் உயிருடன் இருந்தார்கள். அவர்களில் பெற்றிஜேன் என்னும்பெண் வேறுஒரு சிறுபெண்ணுடன்சேர்ந்து துப்பாக்கிச்சன்னங்கள் செய்துகொண்டிருந்தாள். அந்நேரம் தன்வீட்டில் வெடிச்சப்தம் கேட்பதைஅவதானித்தாள். பாவம்! ஒரு சிறுபெண் என்ன செய்ய முடியும். இன்னும் உயிருடன் இருக்கும் தன் சகோதரனையாவது மரணத்திலிருந்துமீட்க விரைந்து ஓடினுள். அங்கே கண்டகாட்சி அவளையே உலுப்பிவிட்டது. அங்கே சிறுவர் முதல் பெரியவர்கள்வரை பலஇந்தியர் போராடிக்கொண்டிருந்தனர்.

காயப்பட்டவர்களுக்குப் பெண்கள் உணவுகொண்டுசென்று அவர்களைப் பாதுகாத்தார்கள். பெற்றிஜேனுடன் சென்றசிறுபெண்: "இத்தேசத்தின்அதிபதி சமாதானத்தைக் கொடுப்பாரா?" என்று கேட்டாள். "அது நம்பிக்கையில்லை. ஏனெனில், குண்டுகள் செய்வதற்குரிய சாமான்கள்ஒன்றுமே நம்மிடமில்லை" என்று படைத்தலைவன்கூறி ஒருதொன் துவக்குமருந்து வாங்கிவரும்படி இவர்களை அனுப்பினுன், ஆனுல், மறுகணம் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். அவ்விடத்திலிருந்து 60யார் தூரமான இடத்தில் துவக்குமருந்து ஒருவீட்டில் இருப்பதாகச் சேனைத்தலைவன் கூறினுன். ஆனுல், அங்குசெல்வது எவ்வளவோ கடினமானது. ஆயினும் தங்கள் இனத்தவர்களைக்காப்பாற்றும்நோக்கம்இருந்தபடியால் அவர்கள்போகத் தயாரானுர்கள். அவர்கள் பத்துயார்

தூரம்போகுமுன் இந்தியரால் சுடப்படுவார்களென்பது சேனைத்தலைவனுக்குத் தெரியும். அதனால் அவர்களை அனுப்பவும் அவனுக்கு மனம் வரவில்லை. இதையறிந்த பெற்றிஜேன் ஓடிவந்து:

"சேனைத்தலைவரே! எனக்குவிடைகொடும், என்நாட்டுக்காக இக்காரியத்தைச் செய்கிறேன்" என்றாள். அவனோ சம்மதிக்கவில்லை. பெற்றிஜேன் மறுமொழியாக "என்னை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள். நான் சிறுமிதானே. இதோ போய்வருகிறேன், உத்தரவு கொடும்" என்றாள். எல்லோரும் இதற்குஇணங்க, சேனைத்தலைவன் அவளைப்பார்த்து:

"சரி, நீ ஓடிச்சென்று மருந்தை ஒரு மேசைச்சீலைக்குள் கொட்டிக்கொண்டு ஓட்டத்தில் வரவேண்டும்" என்று கட்டளையிட்டு அனுப்பினான். அப்படியே அவள்ஓடிச்சென்று கொடியவர்களிடமிருந்து தப்பிக் குறித்தஇடம் சென்றுவிட்டாள். மருந்தும் எடுத்துவிட்டாள் ஆனால், அதைக் கொண்டுசெல்வது எப்படி? சிறுமி என்னசெய்வாள். உடனே அவளுக்கு ஒருஎண்ணம் உதித்தது.

'தேவனால்ஆகாதது ஒன்றுமில்லை' என்று ஆசிரியர் சொல்லிக்கொடுத்தது அவளுக்கு நினைவுவந்தது. உடனே முழந்தாட்படியிட்டுத் தேவனைப்பார்த்துப் பிரார்த்தித்தாள். "என் அன்புநிறைந்த தந்தாய்! நான் மரணத்துடன் பந்தயம் ஓடுகிறேன். நல்லதேவனே! இந்தப்பந்தயத்தில் என்னை வெற்றிபெறச் செய்யும். என்நாட்டைக் காப்பாற்றும்" என்று செபித்தாள். செபம்முடிந்ததும் ஒருபுத்துணர்ச்சி பெற்றவள் போல் முன்னிலும் அதிகவேகமாக ஓடினாள். இவள் ஏதோ ஒருபொருள் கொண்டு போவதைக்கண்ட அந்நியர் அவளுக்குச்சுட்டார்கள். ஆனால், தேவனின்அருள் அவளுடன் இருந்தபடியால் அவளுக்கு ஒருஆபத்தும் நேரிடவில்லை. அவள் தலைவனிடம் மருந்தைக் கொடுத்தாள். அம்மருந்தைக்கொண்டு புதியகுண்டுகள் செய்யப்பட்டன. அக்குண்டுகளின் உதவியால் பகைவர் துரத்தப்பட்டனர். நாட்டைக் காப்பாற்றிய இச்சிறு பெண்ணை அமெரிக்கர் இன்றும் நினைவுகூருகின்றனர்.

—(⌣)—

## பங்குக்குருவரில் மட்டி இப்பொழுது......

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

ரூய் நித்திரைவரும் சாமத்தில்தான் — நடுநிசியில் அல்லது ஒருமணிக்கு — எழுந்திருப்பார். "இப்படி எழுந்திருப்பதினால் எனக்குஏதோபுண்ணியம்என மக்கள் எண்ணுவர்; அப்படியல்ல. இரவில் எனக்கு ஒரே நோக்காடு; அரைமணிவேளை உறக்கங் கிடையாது. தேகமெல்லாம் எரிகிறதினாலே எழுந்திருந்து அந்தப் பெட்டகத்தின்மேலே சாய்ந்திருக்கிறேன்; அப்பொழுது நோவுகுறைகிறது"என விளக்கங்கொடுப்பார் வியான்னி சுவாமியார்.

(வளரும்)

## அன்னையின் மோட்சாரோபணம்

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

வதல்லவா? ஆதலால்தான் சாஸ்திரநுணுக்கத்தில் தேர்ச்சி பெறாத கீழ்தேசத்துக் கிறீஸ்துவ மக்கள் தாயின்மேலுள்ளஅன்பு வழிகாட்ட எபேஸ்நகரின் பொதுச்சங்கத்தின் நாள்முதல் கன்னித்தாயின் மோட்சஆரோபணதிருநாளை ஆடம்பரமாய்க் கொண்டாடிவந்தனர்.

தேவதாயின் மோட்சஆரோபணத்தைப்பற்றி மாமரியைத் தமது தாயாகப்பெற்ற அர்ச். அருளப்பர் குறிப்பாகவோ, தெளிவாகவோ சொல்லிப்போயிருப்பார்என்று எதிர்பார்க்கலாம். நமதுஎண்ணம் வீணாகவில்லை. காட்சியாகமத்தில் (11-19) "அப்போது பரலோகத்தில் சருவேசுரனுடையஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கைப்பெட்டகம் தோன்றியது" என்றார். உடன்படிக்கைப்பெட்டகம் எப்போதும் தேவதாயைத்தான் குறிக்கிறது. யேசுவைக் குறிப்பது செம்மறிப்புருவை. திருச்சபையைக்குறிப்பது கடவுளின்(இல்லம்)ஆலயம் அல்லது கடவுளின்நகர் என்ற பதங்களாம். 'உடன்படிக்கைப்பெட்டகம் தோன்றியது' என்பதற்கு அடுத்தவசனம் எல்லாச்சந்தேகத்தையும் போக்கும். அவ்வாக்கியம் தேவதாயைத்தான் குறிக்கிறது என்று எக்காலத்துக் கிறீஸ்துவ மக்களும் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டனர். அந்தவாக்கியம் என்ன? ஓர்ஸ்திரீ சூரியனைஆடையாக அணிந்திருந்தாள்; அவளுடைய பாதங்களின்கீழ் சந்திரனாம், அவளுடையசிரசின்மேல் பன்னிருவிண்மீன்களாலான ஒருகிரீடமும் இருந்தது." இவ்விருவசனங்களினின்று நாம் அறியக்கிடப்பதென்ன? வானலோகத்தில் இந்தஅடையாளங்களின் ரூபத்தில் மாமரியைப் பார்த்ததாகச் சொன்னாரே அர்ச். அருளப்பர். தேவதாயை ஆத்துமசரீரத்தோடு மோட்சத்தில்கண்டார்; மாமரி ஆத்துமசரீரத்தோடு மோட்சம் கொண்டுபோகப்பட்டு விட்டாள்என்றுதானே குறிப்பாய்ச்சொல்லுகின்றார்.

ஆதிஆகமத்தில் தாய்க்கும், சேய்க்கும் சாத்தான்மேல்உள்ள பகையைப்பொறிக்கும் வாக்கியம் தேவதாயின் மோட்சஆரோபணத்தைக் குறிக்கிறதல்லவா? இருவரும்சேர்ந்து பசாசின்தலையை நசுக்குகின்றனர். மோட்சத்திலிருக்கும் யேசுவோடு கன்னித்தாயும் ஆத்துமசரீரத்தோடு மணிப்பீடமமர்ந்து பேயின்அட்டகாசத்தை ஒடுக்கி வெற்றிகாணவேண்டுமல்லவா?

அர்ச். தமாசேன்அருளப்பர் மோட்சஆரோபணத்தைப் பற்றிச் செய்தபிரசங்கம்ஒன்றில் மாமரியைப்பற்றிச் சொல்லுவார். "பூமியின்ஆழத்தில் அவள் அடைபடவில்லை: மூன்றும்நாள் அவளிடமிருந்து எடுத்தஉடலை (ஆண்டவர்) எழுப்பியதுபோல இத்தாயும் கல்லறையினின்று பறிக்கப்பட்டுத் தம்மகனுக்கு ஒத்திருக்கச் செய்தார்." அப்பிரசங்கத்தில் அடங்கிய அமிர்தமொழிகளையெல்லாம்சொல்ல இங்குஇடமில்லை.

வே. க. குரலொலி

# சுதேச வர்த்தமானம்

### தராதரப்பத்திரம்பெற்ற ஆசிரியர்கள்

தராதரப்பத்திரம்பெற்ற ஆசிரியர்கள் அனுபவிக்கும் அதேசலுகைகளைத் தராதரப்பத்திரம் பெறாத ஆசிரியர்களுக்கும் வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதனால் தராதரப்பத்திரம்பெறாத சுமார் இருபதினாயிரம் ஆசிரியர்களுக்குப் பென்ஷன், இலவச றெயில்வே டிக்கெற்றுகள் போன்றவைகள்கிடைக்கும். இதுவரை தராதரப்பத்திரம் பெறாத ஆசிரியர்களாய்ப் பத்துவருட அனுபவமுடையவர்களுக்கே இந்தச்சலுகைகள் வழங்கப்படலாயின.

### கொலைகளும் விபத்து மரணங்களும்

இலங்கையிலே சென்றஆடிமாதத்தில் நிகழ்ந்துள்ளகொலைகள் 41என்றும், இவ்வருடத்திலே ஆடி ஈறாகவுள்ள ஏழுமாதங்களிலும் மொத்தமாக நிகழ்ந்துள்ளகொலைகள் 356என்றும் பொலிஸ்தலைமைக் காரியாலயம் அறிக்கையிட்டிருக்கிறது. சென்றஆடி மாதத்திலே பல்வேறு விபத்துகளாலும் 43 பேர்இறந்திருக்கின்றனர். ஆடி ஈறாகவுள்ள ஏழுமாதங்களிலும் விபத்துகளால் மொத்தமாக இறந்தவர்கள் தொகை 245.

### பெரியமடுக் குடியேற்ற திட்டம்

மன்னார்ப் பிரிவைச்சேர்ந்த பெரியமடுக் குடியேற்றத்திட்டத்தில் மேலும் 53குடும்பங்களைக் குடியேற்றுதற்கான மனுப்பத்திரங்கள் இன்றுவரை மன்னார் அரசாங்கஅதிபரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவர்களெல்லாம் மன்னார்ப்பிரிவிலே வசிப்பவர்கள். தேர்ந்தெடுக்கப்படும் குடும்பங்களுக்கு மூன்றுஏக்கர் நெற்காணியும், மாதிரிப்படவீடும், மலகூடமும் அடங்கிய இரண்டு ஏக்கர் மேட்டுக்காணியும் வழங்கப்படுவதோடு, அவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து குடியேற்றத்திட்டத்திற்குச் செல்வதற்கான இலவச போக்குவரத்து வசதியையும் அரசாங்கம் செய்துகொடுக்கும்.

### கால்நடைக் காட்சி

மன்னார்ப்பிரிவிலே ஆடுகள், மாடுகள் முதலியவற்றின் விருத்திக்கு ஊக்கமளிக்குமுகமாகக் கால்நடைக் காட்சி ஒன்றை இம்மாதம் 29-ந்திகதியன்று மன்னார்ப்பட்டினத்திலுள்ள அரசினர் பாடசாலையில் நடத்துவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

### கைப்பற்றப்பட்ட வெங்காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 7-ந்திகதிவெள்ளிக்கிழமை கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறிஒன்றில் ஆயிரக்கணக்கான சோடாப்போத்தல்களிடையே பதினைந்து மூடை உள்ளூர் வெங்காயம் தென்மராட்சி விளைபொருள் கூட்டுறவுச்சமாசத்தின் காரியதரிசியான திரு. ஏ. கே. இராமலிங்கம் அவர்களால் ஆனையிறவுத் தடைதாண்டியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் பேருதவியினாலும், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினாலும் என்னை 7 வருஷமாய் வாதித்த குடல் வியாதி குணமடைந்ததையிட்டு என் முழு இருதயத்தோடும் அவர்களுக்குத் தோத்திரம்கூறி என் நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

இ. விக்றோறியா,
கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

### மலையாளிகளின் ஆர்ப்பாட்டம்

இந்திய மத்தியஅரசாங்கம் கேரளத்திலே தலையிட்டமை பற்றிக் கடும் ஆட்சேபனை தெரிவிக்குமுகமாகச் சென்ற திங்கட்கிழமைகாலை 10-30 மணிக்கும், 11 மணிக்குமிடையிலே சுமார் 200 மலையாளிகள்கொழும்பிலுள்ள இந்திய ஹைகம்மிஷனின் முன்புறவளவுள் நுழைந்து பலத்த ஆர்ப்பாட்டஞ் செய்தனர். கம்யூனிஸ்த கட்சியைச் சேர்ந்தவர்களென்று கொள்ளப்படும் இவர்கள் இந்திய மத்தியஅரசாங்கத்தைக் கண்டிக்கும்சுலோகங்களைக்கோஷித்தவண்ணம் இருந்தார்கள். இவர்களைக் கலைக்கப் பொலிசார்சென்று தடியடிப் பிரயோகஞ் செய்ததில் 13 பேர் காயமடைந்தனரென்றும், 6 பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனரென்றும் தெரியவருகிறது.

### சர்வகலாசாலை வித்துவான் பரீட்சை

சமீபத்தில் நடைபெற்ற இலங்கைச் சர்வகலாசாலை வித்துவான் பரீட்சையிலே ஆசிரியர் எஸ். அடைக்கலமுத்து அவர்கள் கண்ணியத்துடன் அரங்கேறியிருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். சர்வகலாசாலை நடாத்திவரும் "இளங்கதிர்"என்ற ஆண்டுச்சஞ்சிகையின் 31-வது ஆண்டு ஆசிரியர்பதவியிலும் இவர்அமர்ந்திருந்தார். "அமுது" எனும் அழகிய புனைபெயருடன் நம் பத்திரிகையில் காலந்தோறும் வெளிவரும் கவிதைகள், கட்டுரைகளை அனுப்பிவருகிறவரும் புதியவித்துவான் அவர்களேஎன்பது ஈண்டு குறிப்பிடற்பாலதாகும்.

### புதிய அரசியற்கட்சி

கண்டியிலே "உடாட்ட பொறுனே" எனும் நாமத்துடன் புதியஅரசியற் கட்சிஒன்று ஆக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபொதுத்தேர்தலில் கண்டிப் பகுதிகளிலே ஏறக்குறைய 72தொகுதிகளில் போட்டியிடும் நோக்கத்தோடு தான் இந்தக்கட்சி ஆக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திலே கண்டிப்பகுதிகளின் அபிவிருத்திக்காக உழைப்பதையே இந்தக்கட்சி தனது முக்கியகொள்கையாக அனுட்டிக்கவிருக்கிறது. அதன்கொள்கைகளைப் பிரசாரஞ்செய்வதற்கென்று நூறுபேரைக்கொண்ட ஓர்கம்மிற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

### எக்ஸ்பிரஸ் பஸ்சேவை

பருத்தித்துறை— யாழ்ப்பாணவீதியிலே பிரயாணிகளின் நலன்கருதி 'எக்ஸ்பிறஸ்' பஸ்சேவைஒன்றை இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறைக் கிளைச்சபை ஆரம்பித்திருக்கிறது. காலை 7மணிக்குப் பருத்தித்துறையிலிருந்தும், 8-15மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் இந்தப்பஸ் சேவை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும், சிலதினங்களின் பின் காலைமாலைவேளைகளிலே நான்கு எக்ஸ்பிறஸ்சேவைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

● உலாந்த குருத்துவமாணவர்கள் அநேகர் தங்கள்விடுமுறைநாட்களிலே தொழிற்சாலைகளிலும், காரியாலயங்களிலும் வேலைசெய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்குக்காரணம், அவற்றின்நிலைமைகள்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதேயாகும். தொழில் முகாங்களில் சேர்ந்துகொள்ளுமாறு குருமடத்துஅதிகாரிகளும் மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றார்கள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 13-1959.